பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 6.00

துரித தபால்.பொதிகள் சேவை
உள்ளூர் வெளிநாடுகளுக்கான
சகல தபால்;பார்சல்கள் எதுவானாலும்
உடனுக்குடன் அனுப்புவதற்கு
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
Computer Systems
303, K.K.S. ROAD, JAFFNA
T.P : 021-222 2670
FAX: 222 3214
Email-del-smskr@eureka.lk

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | கார்த்திகை 20 | சனிக்கிழமை | (06.12.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 352

# நல்லிணக்க அரசு இல்லையேல்

# மாற்று வழியைக் கையாள்வேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(நமது நிருபர்)

**அடுத்துவரும் இரண்டு வார காலத்துக்குள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கா தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசுடன் சகவாழ்வு அரசியல் விடயத்தில் பொது இணக்கப்பாடு ஒன்றுக்கு வரமுடியாது போனால், தேசிய மறு சீரமைப்பு மற்றும் நல்லிணக்கக் கூட்டு அரசாங்கம் அமைப்பது சம்பந்தமான யோசனைகளைக் கைவிட்டு, கீழ்மட்டத்திலான தீர்வு ஒன்றை எடுக்க வேண்டி நேரிடும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.**

புனித ரம்ழான் பண்டிகையை முன்னிட்டு ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற விசேட வைபவமொன்றில் உரையாற்றும் போதே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்குக் குறுகிய கால இணக்கப்பாடொன்று எட்டப்பட வேண்டியது அத்தியாவசியமானதாகும். இந்நிலையில் இன்று வரை எம்மிடையே எதுவித இணக்கப்பாடும் ஏற்பட வில்லை.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சியும் அவர்களது சகாக்களும் எனக்கும் பிரதமருக்குமிடையே இணக்கப்பாடு ஏற்பட வேண்டும் என்பதையே விரும்புகின்றனர். என்பதை நான் நன்கு அறிவேன்.

நாட்டின் சனத்தொகையில்80 வீதமானோர் இத்தகைய உடன்பாட்டுக்கு ஆதரவாகவேயுள்ளனர். இதனைப் புள்ளி விபரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன.

இந்நிலையில் ஐக்கிய தேசிய முன்னணியினரிடம் இருந்து சாதகமான பதில்எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை. அவ்வாறான உடன்பாடுஒன்றுக்கு அவர்கள் வரமுடியாது போனால், அதுவும் அடுத்து வரும் இரண்டு வாரகாலத்துக்குள் பிரதமர் ரணில்விக்கிரமசிங்காவுடன் தேசிய நல்லிணக்க அரசு அமைக்க முடியாது போனால் பிரச்சினைக

(10ம் பக்கம் பார்க்க)



ஜனாதிபதி மாளிகையில் இடம் பெற்ற புனித ரம்ழான் பண்டிகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உணவு வழங்கும் காட்சி

## தென்னாபிரிக்க நாடாளுமன்றில் புலிகளுக்கு அமோக வரவேற்பு

(கேப்டவுண்)

தென்னாபிரிக்க குவாசுலு

செய்த விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவின் பிரதி

தமிழ் மக்களின் கோரிக்கைக்கு ஆதரவாக தீர்மானம் ஒன்றும் நிறை

## ஜனாதிபதி-பிரதமர் சந்திப்பு

அத்தியாவசியமானதாகும். இந்நிலையில் இன்று வரை எம்மிடையே எதுவித இணக்கப்பாடும் ஏற்படவில்லை.

எனினும் ஐக்கிய தேசியக் கட்சி முன்னணியினரிடம் இருந்து சாதகமான பதில்எதுவும் எனக்குக் கிடைக்கவில்லை.அவ்வாறான உடன்பாடுஒன்றுக்கு அவர்கள் வரமுடியாது போனால், அதுவும் அடுத்து வரும்

# ஜனாதிபதி-பிரதமர் சந்திப்பு முடிவுகள் வெளியிடப்படவில்லை

## மீண்டும் 10ம் திகதி சந்திப்பர்

(கொழும்பு)

அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணும் வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும் இடையில் நேற்று சந்திப்பொன்று இடம்பெற்றது.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற இச் சந்திப்பில், தற்போதைய அரசியல் நெருக்கடி நிலையை சகஜ நிலைக்கு கொண்டு வருவதற்கான ஆரம்பப்படி முறைகள் குறித்து, இருவரும் கருத்துக்களை பரிமாறியதாகத் தெரியவருகிறது. எனினும் நேற்றைய சந்திப்பின் முழு விபரமும் வெளியிடப்படவில்லை.

அரசியல் நெருக்கடி நிலைக்குத் தீர்வு காணவென உருவாக்கப்பட்ட மனோ தித்தவெல்ல-மலிக்சமர விக்கிரம குழுவினரின் நடவடிக்கைகள் குறித்தும், அதன் முன்னனேற்றங்கள் பற்றியும் தலைவகள் இருவரும் ஆராய்ந்ததாக மலிக் சமரவிக்கிரம தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் அரசியல் நெருக்கடிக்கான தீர்வு இழுத்தடிக்கப்பட்டு வரும் நிலையில் அதனை மேலும் நீடிக்காமல் எதிர் வரும் 15ம் திகதிக்குள் இறுதி முடிவை எடுக்க வேண்டும் என்பதில் ஐக்கிய

(10ம் பக்கம் பார்க்க)

# யாழ்.வந்த பயணிகளிடம் புத்தளத்தில் கொள்ளை

## ஆயுதம் தாங்கிய கொள்ளையர்கள் கைவரிசை

(தம்பசிட்டி)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி பத்துப் பயணிகளுடன் வந்து கொண்டிருந்த ஹயஸ்வான், புத்தளத்தில் ஆயுதம் தாங்கிய கொள்ளையர்களால் வழிமறிக்கப்பட்டு, பயணிகளிடமிருந்த நகைகள் பொருட்கள் மற்றும் பணம் என்பன சூறையாடப்பட்டுள்ளன.

பருத்தித்துறையைச் சேர்ந்த பயணிகள் மேற்படி மானிப்பாயைச் சேர்ந்த வானை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு கொழும்புக்குச் சென்றிருந்தனர்.மீண்டும் அங்கிருந்து நேற்று யாழ்.நோக்கிப் புறப்பட்டு வந்து கொண்டிருந்த போதே இக் கொள்ளைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

அதிகாலை 2 மணியளவில் புத்தளத்தில் வானை மறித்த ஆயுதம் தாங்கிய கொள்ளையர்கள் நான்கு பேர் வானின் சாரதியிடம் லைசன்ஸ் கேட்டனர். அவர் அதனைக் காண்பிக்க முற்படுகையில், வானின் திறபபை எடுத்துக் கொண்டு சாரதியை மிரட்டி காட்டுக்குள் வானைக் கொண்டு சென்று பயணிகளிடமிருந்த நான்கு லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பொருட்கள் மற்றும் 25 ஆயிரம் ரூபாபணம் என்பவற்றை பறித்தெடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று நண்பகல் பருத்தித்துறையை வந்தடைந்த மேற்படி பயணிகள் இச்சம்பவம் பற்றி பொலிஸில் முறைப்பாடு செய்ய உத்தேசித்திருப்பதாகத் தெரிவித்தனர். (இ-45)

# புலிகளுக்கு அமோக வரவேற்பு

(கேப்டவுண்)

தென்னாபிரிக்க குவாசுலு நட்டார் மாகாண நாடாளுமன்றத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவின் பிரதிநிதிகளுக்கு அங்கு பலத்த வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத்திற்கு விஜயம் செய்த விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவின் பிரதிநிதிகளை அம்மாகாண அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்தித்து தமிழ் மக்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்ததாக தெரியவந்துள்ளது.

அத்துடன், அந்நாடாளுமன்றத்தில் தமிழ் மக்களின் கோரிக்கைக்கு ஆதரவாக தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைககின்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த மாதம் 29 ஆம் திகதி தென்னாபிரிக்காவுக்கு விஜயம

(10ம் பக்கம் பார்க்க)

# ஈ.பி.டி.பி உறுப்பினர் புலிகளிடம் சரண்

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளிடம் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் சரணடைந்துள்ளதாக, புலிகளின் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்ரர் தெரிவித்துள்ளார்.

சரணடைந்த இவ் உறுப்பினர் தொடர்பாக, பத்திரிகையாளர்களுக்குத் தகவலளிக்கும் வகையில் இன்று முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி ஊடக அலுவலகத்தில் பத்திரிகையாளர் சந்திப்பொன்று இடம் பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## விமானத்தில் இயந்திரக் கோளாறு

# அவுஸ்ரேலியப் பிரதமர் ஜோன் கட்டுநாயக்காவில் இறங்கினார்

(கொழும்பு)

அவுஸ்ரேலியப் பிரதமர் ஜோன் ஹொவாட் திடீரென நேற்று முன்தினம் காலை கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு விஜயம் செய்திருந்தார். நைஜீரியாவில் நடைபெறவுள்ள பொதுநலவாய நாடுகளின் உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக அங்கு செல்லும் வழியில் அவர் பயணம் செய்த விமானம் திடீரென கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியது. ஆனால் இவ்விடயம் இரகசியமாக வைக்கப்பட்டுவிட்டது. ஏனெனில் அல்குவேதா தீவிரவாதிகளின் இலக்கு அவர்மீது இருப்பது காரணமாகஇவ்விடயம் முன்கூட்டியே தெரிவிக்கப்படவில்லை எனஅறியவருகிறது. அவர் விமான நிலையத்தில் காலை உணவருந்தியபின் நைஜீரியா பயணமானார். (த-6)

# பயங்கரவாதம் நிரூபிக்கப்படாதவரை எவரையும் தண்டிக்கக் கூடாது

## அமெரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம்தீர்ப்பு

(வாஷிங்டன்)

விடுதலைப் புலிகளுக்கு அவர்களது மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காகவும், அவர்களது கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களில் சுகாதாரம் சட்டம் போன்ற துறைகளில் அவர்களுக்கு உதவுவதன் பொருட்டு சிறப்புத் தேர்ச்சியாளர்கள் தங்கள் ஆலோசனையை கொடுத்து உதவுவதற்காகவும்,

சந்தேகத்திற்கு இடமற்ற முறையில் குறிப்பிட்ட இயக்கம் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகிறது என நிரூபிக்கப்படாத வரைக் கும், பொருளாதார ரீதியில் உதவு கிறார்கள் என்பதை மட்டும் வைத்துக் கொண்டு அமெரிக்க தேச பக்தச் சட்டத்தின் அடிப்படையில் தனிநபர்களையோ அமைப்பையோ தண்டிக்கக் கூடாது என லாஸ் ஏஞ் ஜல்ஸ் நகரிலுள்ள அமெரிக்க மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் ஒன்பதாவது வட்டம் தீர்ப்பளித்திருக்கிறது.

பிரச்சனைக்குள்ளான பகுதிகளில மனிதாபிமான ரீதியில் உதவிகளை மேற்கொள்கிறவர்கள் மீது செப்டம்பர் 11 க்குப் பிற்பாடு உருவாக்கப்பட்ட அமெரிக்க தேசபக்த சட்டமும், அதனது தடை செய்யப்பட்ட பயங்கரவாத அமைப்புக்களுக்கு பொருளாதார ரீதியில் உதவுதைத் தடுப்பது அல்லது பயிற்சி கொடுதது உதவுவதைத் தடுப்பது எனும் சரத்து பாரதூரமான விளைவுகளை உருவாக்குகிறது

இந்தச் சரத்துக்கு எதிராக வாதிட்ட அரசியல் சட்ட உரிமைகளுக்கான

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



கோப்பாய் தெற்கு உதயதாரகை சனசமுக நிலைய பாலர் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் மாணவர்கள் தேவாரம் இசைப்பதை படத்தில் காணலாம்.

### மீள்நிர்மாண வேலைகளைத் துரிதப்படுத்தாவிடில்

# மின்சார சபைக்கு சர்வதேச நிதி உதவிகள் நிறுத்தப்படும்

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபை தனது மீள் நிர்மாண வேலைகளை துரிதப் படுத்தாவிடில் அதற்கான நிதியுதவி களை நிறுத்த நேரிடும் என உலக வங்கி சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதிகள் பிரதமரைச் சந்தித்துப் பேசும் போது எச்சரித்துள்ளனர்.

இவ் எச்சரிக்கையைத் தொடர்ந்து மின் சக்தி எரிபொருள் அமைச்சர் கரு ஜெயசூரியாவை மின்சார சபையின் புனரமைப்பு பணிகளை கூடிய விரைவில் முடிவுக்கு கொண்டு வருமாறு பிரதமர் பணித்துள்ளதாக தெரிய வருகிறது.

கடந்த ஜனவரி மாதம் முதல் இப் பணிகளைச் செய்து முடிக்க மின்சார சபைக்கு அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. இதுபற்றி மின்சார சபைத் தலைவர் எம். சுபையா தெரிவிக்கையில்;

மேற்படி சர்வதேச அமைப்புக்கள் மின்சாரசபையை மட்டுமன்றி வேறு நிறுவனங்களையும் எச்சரிக்கை செய்துள்ளன. மின்சார சபையின் புனரமைப்பு பணிகள் கடந்த மாதம் ஒக்டோபர் முதலாம் திகதி முடிவடைந்திருக்க வேண்டும் ஆனால் சில காரணங்களுக்காக அப்பணிகள் பிற்போடப்பட்டு விட்டன.

எதிர்வரும் ஜனவரியில் பெரும் பாலான வேலைகள் முடிவடைந்து விடும் அடுத்த இருவாரங்களில் தொழிலாளர்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப் படும் என்றும் சுபையர் மேலும் கூறினார். (த.ம)

# மலையகத் தொழிலாளர்களுக்கு அடுத்த ஆண்டு ஓய்வூதியம்!

(கொழும்பு)

மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வரும் நிலையில் அவர்களுக்கான ஓய்வூதியம் வழங் கும் திட்டம் நடைமுறை அடுத்த ஆண்டு இறுதிக்குள் அமுலுக்கு வருமென பெருந் தோட்டத் துறை அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இலங்கைக்கான வெளிநாட்டுச் செலாவணியில் 10 சத வீதத்தை பெற்றுத் தரும் பெருந் தோட்டத் துறையை ஊக்குவிக்கும் முகமாகவும் தொழிலாளரின் நலன்களைக் கருத்தில் கொண்டும் இவ் ஓய்வூதியத் திட்டம் தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-18)

# அரச ஊழியரின் மார்கழிச் சம்பளம் 19ஆம் திகதி

(கொழும்பு)

சகல அரசாங்க ஊழியர்களதும் இம்மாதச் சம்பளத்தை எதிர்வரும் 19ஆம் திகதி வழங்க நடவடிக்கை எடுக்குமாறு சகல அமைச்சுச் செயலாளர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்று சகல திணைக்களங்களுக்கும் மாகாணச் செயலாளர்களுக்கும் நேற்று அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு தெரிவிக்கிறது.

நத்தார் பண்டிகையை முன்னிட்டும், வருட இறுதிக்குள் கணக்கு விபரங்களை பூர்த்தி செய்வதற்கு ஏதுவாகவுமே இந்நவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (தி-60)

# கடை உடைத்து திருட்டு

(யாழ்ப்பாணம்)

கல்வியங்காட்டுச் சந்திக்கும் மூன்றாம் கட்டைக்கும் இடையில் உள்ள இலத்திரனியல் உபகரணங்கள் பழுது பார்க்கும் தினுசன் எலக்ரோனிக் கூடம் கடந்த 27ம் திகதி நள்ளிரவு திருடர்களால் உடைக்கப்பட்டு ஒரு லட்சம் ரூபாவுக்கும் அதிகமான இலத்திரனியல் உபகரணங்கள், மணிக்கூடுகள் திருடப்பட்டுள்ளன. இச் சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

இதேவேளை தொடர்ச்சியாக இப் பகுதிகளில் திருடர்களின் கைவரிசை அதிகரித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. (இ)

# ஆசிய பசுபிக் முகாமைத்துவ தலைவராக இலங்கையர்

(கொழும்பு)

ஆசிய பசுபிக் சம்மேளனத்தின் மனிதவள முகாமைதத்துவத் துறைதலைவராக இலங்கை ஆளணி முகாமைத்துவ கல்வி நிறுவனத்தைச் சேர்ந்த குமாரசிங்கா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

இலங்கையார் ஒருவருக்கு இந் நியமனம் வழங்கப்பட்டுள்ளமை இதுவே முதற்தடவையாகும் இலங்கையைப் பொறுத்தளவில் ஆசிய பசுபிக் சம்மேளனத்தின் மனிதவள முகாமைத்துவத் துறைத் தலைவராக முதற் தடவையாக இவ இலங்கையர் தெரிவுசெய்யப்பட்டுள்ளமை தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இலங்கையின் மனிதவள அபிவிருத்தித்துறையில் குமாரசிங்க மேற்கொண்ட ஆய்வுகளின் அடிப்படையிலும் அனுபவத்திற்குமே இந்நியமானம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

வலிகாம வலயத்தில் ஆங்கில பாட ஆசிரிய ஆலோசகர் பதவிககான வெற்றிடத்தை நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கொண்ட பட்டதாரி ஆசிரியர் அல்லது பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்களிடம் இருந்து இதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மாதிரி விண்ணப்பப் படிவங்களை வலயக்கல்வி அலுவலகத்தில் பார்வையிட்டு அதற்கமைய விண்ணப்பிக்க விரும்புபவர்கள் தமது விண்ணப் பங்களை இம்மாதம் 12ஆம் திகதிக்கு முன் உரிய முறைப்படி வலயக்கல்வி அலுவலகத்திற்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (உ)

# இவ் ஆண்டின் சிறந்த வீரராக தென்னாபிரிக்கா அணித் தலைவர்

தெனனாபிரிக்காவில் ஆண்டு தோறும் இடம்பெறும் கிரிகெற் வீரர் களை கௌரவிக்கும் நிகழ்வானது இம்முறை ஜொஹனர் பாக்கில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றது.

இதில் இவ்ஆண்டின் சிறந்த வீரர்களாக தென்னாபிரிக்கா அணித் தலைவர் கிரஹம் ஸ்மித் உட்பட 5 வீரர்கள் தெரிவு செய்யப் பட்டுள் ளனர். இவர்களில் ருடால்.்.ப் முதன் முறையாகவும் அணியின் மூத்த வீரர் பொலக் 4வது முறையாகவும் ஹேர்வுல்கிப்பஸ் மகாயாநிட்னி மற்றும் கிரஹம் ஸ்மித் ஆகியோர் 2வது முறையாகவும் இவ்விருதை பெறுகின்றனர்.

இந்த ஆண்டுத் தொடக்கத்தில் ஸ்மித் தலைவராக அறிவிக்கப்பட்ட போது தென்னாபிரிக்க கிரிக்கெற் வரலாற்றில் இளம் டெஸ்ட்தலைவர் என்ற பெருமை பெற்றமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

# ஒளிவிழா

(சில்லாலை)

பண்டத்தரிப்பு வை.எம்.சி.ஏயின் ஒளிவிழா இன்றுபிற்பகல் 2 மணிக்கு வை.எம்.சி.எயின் பிரதான மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

க.அ.சின்னத்தம்பி தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக ஓய்வுபெற்ற ஆசிரியர் எஸ்.இரத்தினவேலும் சிறப்பு விருந்தினராக காரைநகர் சமூர்த்திவங்கி முகாமையாளர் வண திருமதி எம்.வி.பத்மதயாளனும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-58)


# நல்லூர் பிரதேச சபை
# கேள்வி அறிவித்தல் - 2004

01.01.2004ம் திகதி முதல் 31.12.2004ம் திகதி வரையான காலப்பகுதிக்கு வழங்குவதற்கான மீள்கேள்வி கோரப்படுகின்றது.

| சந்தைகள், துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையங்கள் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்த) |
|---|---|---|---|
| **நல்லூர் உப அலுவலகம்** | | | |
| 1. திருநெல்வேலிச் சந்தை துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் | 1000.00 | 15,000.00 | 38,72,700.00 |
| **கொக்குவில் உப அலுவலகம்** | | | |
| கொக்குவில் குளப்பிட்டிச் சந்தை துவிச்சக்கர வண்டிப் பாதுகாப்பு நிலையத்துடன் | 500.00 | 5,000.00 | 1,75,509.00 |
| 2. கோண்டாவில் வடக்கு அரசடி வீதி மீன் சந்தை | 100.00 | 500.00 | 1,115.00 |

கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதித் திகதி 15.12.2003 திங்கள் 12.00 மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 16.12.2003 செவ்வாய் 10.00 மணிவரை
கேள்வி பத்திரம் திறக்கும் திகதி 16.12.2003 செவ்வாய் 2.00 மணி

மேலதிக விபரங்களை நல்லூர், கொக்குவில் பிரதேச சபை உப அலுவலகங்களிலும் பிரதேச சபை தலைமைச் செயலகத்திலும் காரியாலய நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி,
05.12.2003

செல்லையா செல்வரத்தினம்
செயலாளர்
நல்லூர் பிரதேச சபை

(சி-6967)



# வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
# 2004ம் ஆண்டுக்கான மீள்கேள்வி அறிவித்தல்

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட சந்தைகள், இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடைகள் என்பவற்றை 2004-01-01ம் திகதி முதல் 2004-12-31ம் திகதிவரை குத்தகைக்கு வழங்குவதற்கான மீள்கேள்விகள் கோரப்படுகின்றன.

## அட்டவணை

| இல. | சநதைகள் இறைச்சிக்கடைகள், கருவாட்டுக் கடைகள் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஏற்றுக் கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை (வற்வரி தவிர்ந்தது) | மாத வாடகை (வற்வரி தவிர்ந்தது) |
|---|---|---|---|---|---|
| | **சுன்னாகம் உப அலுவலகம** | | | | |
| 01 | சுன்னாகம் மத்திய சந்தை (துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு உட்பட) | 750.00 | 7500.00 | 2664000.00 | - |
| 02 | உடுவில் கீளிச் சந்தை | 200.00 | 1500.00 | 56000.00 | - |
| 03 | உடுவில் ஆலடிச் சந்தை | 200.00 | 500.00 | 5000.00 | - |
| 04 | சுன்னாகம் மாட்டிறைச்சிக் கடை | 300.00 | 2500.00 | 798200.00 | 100.00 |
| 05 | கருவாட்டுக் கடை இல.05 | 100.00 | 500.00 | 11500.00 | 60.00 |
| | **உடுவில் உப அலுவலகம்** | | | | |
| 01 | மருதனார்மடம் பொதுச் சந்தை(துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு உட்பட) | 750.00 | 7500.00 | 2440000.00 | - |
| 02 | இணுவில் பொதுச் சந்தை | 200.00 | 2000.00 | 39800.00 | - |
| 03 | தாவடி ஆட்டிறைச்சிக் கடை | 200.00 | 2000.00 | 36800.00 | - |
| | **ஏழாலை உப அலுவலகம** | | | | |
| 01 | ஏழாலை சந்தை | 150.00 | 1500.00 | 12650.00 | - |

கேள்விப் பத்திரம் வழங்கப்படும் திகதி இறுதித் திகதி : 2003-12-18, பி.ப.2.00மணிவரை
கேள்விப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி : 2003-12-19, ந.ப.12.00மணிவரை
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் திகதி : 2003-12-19, பி.ப.2.00 மணிக்கு

குத்தகைகள் சம்பந்தமான மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.
2003-12-05.

திருமதி ச.சொக்கலிங்கம்,
செயலாளர்,
வலிதெற்கு பிரதேச சபை,
சுன்னாகம்.

(சி-6970)

# செய்தித் துளிகள்

## 10 வீட்டுத் திட்டம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை புளியங்கூடல் பகுதியில் இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சினால் வீட்டுத் திட்டம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

மேற்படி பகுதியில் உள்ள வறுமைக் கோட்டுக்கு கீழ் வாழ்ந்து வரும் தெரிவு செய்யப்பட்ட வீட்டு வசதிகளற்ற குடும்பங்களுக்கு இத் திட்டத்தின் கீழ் 10 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. (உ-75)

## பொதுக் கூட்டம்

(காரைநகர்)

காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தான மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை மு.ப.10.00 மணிக்கு இணைத் தலைவர்கள் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இப் பொதுக் கூட்டத்தின் போது, புதிய நிர்வாக சபை உறுப்பினர் தொிவும் இடம் பெறவுள்ளது. (உ-246)

## கல்வி டிப்ளோமா நேர்முகத் தேர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண (முழுநேரம், பகுதி நேரம்) வவுனியா (பகுதி நேரம்) பட்டப்பின் கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 14,15 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் நடைபெறவுள்ளது.

நேர்முகத் தேர்வுக்கான கடிதங்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பட்டப்பின் படிப்புகள் பீட அலுவலக விளம்பரப் பலகையில் பார்வையிடலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## முதியோர் தின நிகழ்வு

(தும்பளை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் சர்வதேச முதியோர் தின நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை செயலக மண்டபத்தில் இடம்பெற்றன.

பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி தலைமையில் இடம் பெற்ற மேற்படி நிகழ்வில், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.விக்னேஸ்வரமூர்த்தி, திட்ட இணைப்பாளர் ஆர். இராஜ்குமார் மற்றும் வடமராட்சி லயன் கழகத் தலைவர் பி. கதிரமலை, சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் எஸ். சிவகரன் ஆகியோர் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் போது, திறன் குறைநத முதியவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள், காதுகேட்கும் கருவிகள், ஊன்று கோல்கள் மற்றும் பரிசுப்பொதிகளும் வழங்கப்பட்டன. (உ-24)

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

தீவக கல்வி வலயத்தில் தமிழ்ப் பாட ஆசிரிய ஆலோசகர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுளளன. அதற்கு இலங்கை ஆசிரியர் தரம் 2-11, 2-1, 1ஐச் சேர்ந்தவர்கள் இம் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை தீவக வலயக் கல்விப் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறு வலயக் கல்விப் பணிபாளர் கேட்டுள்ளார். (உ)

## குடிநீர்க் கிணறு

(ஊர்காவற்றுறை)

நாரந்தனை தெற்கு புதுக்குடியிருப்புப் பகுதியில் பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் குடிநீர்க்கிணறு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட கிராம மக்களின் குடிநீர்த் தேவையினை நிவர்த்தி செய்வதற்கு வசதியாக இப்பொதுக் குடிநீர்க்கிணறு அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-75)

## கூட்டமைப்பினர் புலிகளுடன் சந்திப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும் இடையிலான முக்கிய பேச்சுவார்த்தை ஒன்று மிக விரைவில் நடைபெறவுள்ளது.

இப் பேச்சுவார்த்தை அனேகமாக இம் மாதம் 9 ஆம் திகதி அல்லது 21 ஆம் திகதி இடம் பெறலாம் எனத் தெரியவருகிறது.

இதற்கான சம்மதத்தை கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே தெரிவித்துள்ளனர். (தி-61)

## நடமாடும் சேவை

(தும்பளை)

பருத்தித்துறை வலயம் II வங்கிச் சங்கம் தற்போது அப்பகுதியில் நடமாடும் சேவையை வழங்கி வருகிறது.

இச்சேவையின் போது சிறுகுழுக் கணக்கு, பங்குக்கணக்கு, அங்கத்தவர் கணக்கு, சிறுவர் சேமிப்புக் கணக்கு, திரியமாதா கணக்கு போன்ற சேமிப்பு வைப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. (உ-24)

## புதிய நிர்வாகம் தெரிவு

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச செயலக ஊழியர் நலன்புரிச் சங்க வருடாந்த பொதுக் கூட்டம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த புதன்கிழமை நிர்வாக அலுவலா மு.சிவராசா தலைமையில் நடைபெற்ற போது புதிய நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவராக தா.தியாகமூர்த்தி, செயலாளராக வி.ரி.கதிர்காமநாதன், உபசெயலாளராக எஸ்சிவராசா, பொருளாளராக வி.குகநேயன் ஆகியோரும் 13பேர் கொண்ட செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (உ-70)

## மலசலகூட அமைப்புக்கு உதவி

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச செயலர் பிரிவில் ஜே/ 164 செட்டியார்மடம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள வறுமைக் கோட்டின் கீழுள்ள 25 குடும்பங்களுக்கு இந்துகலாசார அமைச்சின் உதவித் திட்டத்தின் கீழ் மலசல கூடம் அமைப்பதற்கு சீமெந்து உட்பட உதவிப் பொருட்கள் அண்மையில வழங்கப்பட்டன. (உ-70)

## சமூகத்திறன் விருத்திப் பயிற்சி

(ஊர்காவற்றுறை)

யாழ்.மாவட்டத்தில் பணியாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான சமூகத்திறன் விருத்திப் பயிற்சியொன்றை யுனிசெவ் நிறுவனம் மற்றும் சாந்தியகம் ஆகியன ஒன்றிணைந்து வழங்கவுள்ளன.

யாழ்.மாவட்டத்திலுள்ள 15பிரதேச செயலர் பிரிவுகளிலும் கடமையாற்றும் சமுர்த்தி உத்தியோகத்தர்களில் தலா இருவர் தெரிவு செய்யப்பட்டு 30 பேருக்கு இச் சமூகத்திறன் விருத்திப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

மேற்படி பயிற்சி தொடர்ச்சியாக 10 நாட்களுக்கு வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (உ-75)

## அடிக்கல் நாட்டல்

(யாழ்ப்பாணம்)

யாழ். அத்தியடி ஸ்ரீசிதம்பர நடராஜ வீரகத்திப் பிள்ளையார் ஆலய அன்னதான மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டு வைபவம் நாளை ஞாயிற்றுக் கிழமை பி.ப.5.00 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இதற்கான அடிக்கல்லை இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் வைபவரீதியாக நாட்டிவைப்பார். (தி-18)

## கலாசார விழா

(தும்பளை)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் கலாசார விழா எதிர்வரும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை வட இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. (உ-24)

## எரி பொருள் விலை உயர்வு

(கொழும்பு)

மண்ணெண்ணை மற்றும் டீசல் எண்ணை விலைகள் நேற்று முன் தினம் நள்ளிரவு முதல் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய தற்போது 31 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வரும் ஒரு லீற்றர் டீசலின் விலை 32 ரூபாவாகவும், 23 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்பட்டுவரும் ஒரு லீற்றர் மண்ணெண்ணையின் விலை 25 ரூபா 50 சதமாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

பெற்றோலின் விலை அதிகரிக்கப்படவில்லை. (தி-60)

## 6 பேருக்கு இடமாற்றம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் 6 பேருக்கு அடுத்த ஆண்டு முதல் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

5 வருடங்களாக இங்கு கடமையாற்றிய 5 எழுதுநர்களுக்கும் ஒரு தட்டெழுத்தாளருக்குமே இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் எழுதுநர்களாகக் கடமையாற்றுபவர்களான செல்வி எம.அண்பாக்கியம் நெடுந்தீவு, உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கும், திருமதி கௌரி ஜெயக்குமார் காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கும் செல்வி க. உமையாள் உடுவில் பிரதேச செயலகத்திற்கும் கு.யோகனராஜ் சங்கானைப் பிரதேச செயல கத்திற்கும், ரி.செந்தில்குமரன் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திற்கும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

தட்டெழுத்தாளரான செல்வி எஸ். ருக்குமணி தேவி நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் பணி மனைக்கு இடமாற்றப்பட்டுள்ளார். (உ-75)

## வரவேற்பு விழா

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை புனித செபமாலை அன்னை ஆலயத்திற்கு புதிய குருவாக நியமிக்கப்பட்ட அன்ரன் மத்தாயஸ் அடிகளின் வரவேற்பு விழாவும், முன்னாள் பங்குத் தந்தை ம.ஜேசுரட்ணம் அடிகளாரின் நன்றி நவிலலும் எதிர்வரும் 8ஆம் திகதி திங்கட் கிழமை இடம்பெறவுள்ளது. (உ-51)

## கொமிசியக் கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ். மரியாயின் சேனையின் மாதாந்தக் கொமசியக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.30க்கு ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பொதுநிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (தி-51)

## பிரதமர் ரணில் இன்று புத்தளம் விஜயம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இன்று சனிக்கிழமை புத்தளம் உடப்புக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

முதன் முதலாக இவ் இடத்திற்கு விஜயம் செய்யவுள்ள பிரதமரை சிறப்பான முறையில் வரவேற்பதற்குப் பெரும் ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், பாராளுமன்ற விவகார அலுவல்கள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர் மற்றும் புத்தளம் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் லெரின் பெரேரா ஆகியோர் தலைமையில் பொதுக் கூட்டமொன்று நடாத்துவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இன்றைய இவ் விஜயத்தின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வண்ணாத்திவில்லு, புத்தளம் மற்றும கற்பிட்டி ஆகிய இடங்களுக்கும் சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் பார்வையிடவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-18)

## தரம்-5 புலமைப் பரிசில் சிறப்புப் பரிசுத் திட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் ஆதரவுடன், கிளிநொச்சி தமிழர் புனர் வாழ்வுக் கழகம் இவ் வருடம் புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு சிறப்புப் பரிசுத் திட்டமொன்றை அறிமுகப் படுத்தவுள்ளது.

இவ்வாண்டில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும் முதல் 3 மாணவர்களும், குறிப்பிட்ட வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெறும் அனைத்து மாணவர்களும் இத்திட்டத்தின் மூலம் பயன்பெற முடியும்.

அத்துடன், பாடசாலை ரீதியில் இப்பரீட்சையில் தேர்ச்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முதல் 3 இடங்களைப் பெறும் பாடசாலைகளுக்கு பெறுமதிமிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (உ-64,8)

## ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலை ஆலோசனைக்குழு யோசனையை அமுல்செய்யக் கோரிக்கை சபையில் எதிர்க்கட்சித்தலைவர்

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் இடம்பெற்றுவரும் பேராசிரியரின் உண்ணாவிரதப் போராட்டம் மறறும் கண்டனங்கள் குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குழுவின் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ நாடாளுமன்றில் நேற்றுக் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அங்கு தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுவின் 36 பக்கங்கள் கொண்ட அறிக்கை நேற்று முன்தினம் அவரிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

பேராசிரியர் கருணாரட்ணவின் உண்ணாவிரதப் போராட்டத்தை தொடர்ந்து ஏற்பட்டுள்ள நிலைமைகளை கருத்தில் கொண்டு, பல்கலைகழக மாணவர்களினது பாதுகாப்பை உறுதிபபடுத்துவதற்காக பல் கலைக் கழகத்தை தற்காலிகமாக மூடிவிட நேரிட்டுள்ளது.

எனினும், பேராசிரியரின் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கும் முகமாக மேலும் பல விரிவுரையாளர்கள் இணைந்து கொண்டுள்ளனர்.

இதனால், இப்போராட்டம் விரிவு பெறாமல் இருக்க ஜனாதிபதி நியமித்த ஆலோசனைக் குழுவின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-61)

## பிக்கு மாணவர்களை வெளியேறுமாறு அறிவிப்பு

(அனுராதபுரம்)

அனுராதபுரத்தில் உள்ள பௌத்த பிக்குகள் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் 2ஆம் 3ஆம் வருட பிக்கு மாணவர்களை விடுதிகளில் இருந்து வெளியேறுமாறு நேற்றுக்காலை அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் அனுமதிக்கப்பட்டுள்ள புதிய பிக்கு மாணவர்களுக்கு மன ரீதியாகவும், உடல் ரீதியாகவும பாதிப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதனை அடுத்தே இம் முடிவை எடுக்கநேரிட்டுள்ளதாக பேராசிரியர் கொடகம மங்கல தேரர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், விடுதிகளில் தங்கியுள்ள பிக்கு மாணவர்களை அங்கிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அனுராதபுரப் பொலிஸாரைக் கேட்டுள்ளார்.

இதே வேளை, மேற்படி மாணவர்களை விடுதிகளில் இருந்து வெளியேற்றுவதென பல்கலை நிர்வாகத்தினால் எடுக்கப்பட்ட முடிவு தவறானது என பல்கலைக்கழக பிக்கு மாணவர்களின் ஒன்றியத்தின் தலைவர் நுககந்த ஹெர கல்யாண வாச தேரர் தெரிவித்துள்ளார். (தி-60)

## இடிமன் பிரதேசத்தில் தமிழ், முஸ்லிம்கள் சந்திப்பு

(திருகோணமலை)

கிண்ணியா மற்றும் ஆலங்கேணிப் பிரதேசங்களில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் மத்தியில் சமூக உறவை மேம்படுத்தும் முகமாக கிண்ணியா ஆலங்கேணி நல்லிணக் சபை ஏற்பாட்டில் இரு சமூகப் பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்றுப் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெற்றுள்ளது.

இடிமன் பிரதேசத்தில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் 22 ஆவது படையணித் தளபதி சுனில் தென்னக்கோன, போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள், கிண்ணியா உலமா சபைப் பிரதிநிதிகள், மற்றும் தமிழ முஸ்லிம் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இப்பேச்சுவார்த்தையின் போது கிழக்கில் தற்போது இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்தல், இரு சமூக மக்களிடையே உறவை ஏற்படுத்தல், ஆலங்கேணிப பகுதிக்கு முஸ்லிம்கள் சென்று வருதல், கிண்ணியாப் பகுதிக்கு தமிழ் மக்கள் சென்று வருவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. (தி-60)

## பண்டத்தரிப்பு பாடசாலையில் கண்ணிவெடியகற்றும் பணியில் படைத்தரப்பினர் ஈடுபாடு

(சில்லாலை)

பண்டத்தரிப்பு மகளிர்கல்லூரியில்கடந்த செவ்வாய்க்கிழமை முதல கண்ணி வெடியகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இராணுவத்தின் கண்ணி வெடியகற்றும் பொறியியல் பிரிவு இப்பணியில் ஈடுபட்டுள்ளது.

மேற்படி பாடசாலை மைதானத்தைத் துப்புரவாக்கிக் கொண்டிருந்த ஒருவர் கடந்த 2000ஆம் ஆண்டில் மிதிவெடியில் சிக்கி காலையும் கண்ணையும் இழந்ததைத் தொடர்ந்து இங்கு கண்ணிவெடி அகற்றவேண்டியதன் அவசியப்பாடு வலியுறுத்தப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

தற்போது பாடசாலை வளாகம் முழுமையும் கண்ணிவெடியகற்றும் மேற்படி குழுவினரால் பரிசோதிக்கப்பட்டு வருகிறது. (உ-58)

# வாஜ்பாய் பாகிஸ்தான் செல்வது உத்தியோகபுர்வமாக உறுதிப்படுத்தப்பட்டது

(புதுடில்லி)

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமபாத்தில் எதிர்வரும் ஜனவரி மாதம் 4ஆம் திகதி நடைபெறவுள்ள சார்க் உச்சிமகாநாட்டில் கலந்து கொள்ள விருப்பதை இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் உறுதி செய்துள்ளார்.

இது விடயம் தொடர்பாக நேற்று முன்தினம் பிரதமர் வாஜ்பாய், பாகிஸ்தான் பிரதமர் ஜபருல்லா கான் ஜமாலிக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் எதிர்வரும் ஜனவரிமாதம் 4ஆம் திகதி இஸ்லாமபாத்தில் நடைபெறவுள்ள சார்க் உச்சிமகாநாட்டில் கலந்து கொள்ள விருப்பதாக முன்னர் கூறியிருந்தேன். எனினும் அப்போது அதனை உறுதிப்படுத்திக்கொள்ளவில்லை.

கடந்த மாதம் 26ஆம் திகதி முதல் காஷ்மீர் எல்லைப் பகுதியில் பாகிஸ்தான் யுத்தநிறுத்தத்தை அமுல் படுத்தியது.

இந்த அறிவிப்புக்கு ஆதரவு வழங் கும் வகையில் இந்தியாவும் அன்றைய தினம் முதல் அப்பகுதிகளில் யுத்தநிறுத்தத்தை அமுல் படுத்தியுள்ளது.

இதனையடுத்து தினமும் வெடிகுண்டுகளின் சத்தமும், துப்பாக்கி வேட்டுக்களின் சத்தத்தையும் கேட்டு வந்த அப்பகுதி மக்கள் தற்போது அமைதியான வாழ்க்கை நிலையை அனுபவிக்க் ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலை இருநாடுகளுக்குமிடையில் சமாதானப் பேச்சுக்களை நடத்த வழிவகுக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இந்த எதிர்பார்ப்பினை மேலும் வலுவூட்டும் வகையிலேயே எனது பாகிஸ்தான் விஜயத்தை தற்போது உறுதிப்படுத்தியுள்ளேன் எனக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் சார்க் உச்சிமகாநாட்டில கலந்து கொள்வதை உறுதிப்படுத்தியுள்ள அடல் பிஹாரி வாஜ்பாய் இரு நாடுகளுக்குமிடையிலான பிரச்சினைகள் குறித்து அங்கு பேச்சுக்கள் நடத்துவது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. (உ-2)



# பலஸ்தீன இயக்கப் பிரிவுகள் கெய்ரோவில் கூடிப் பேச்சு

(கெய்ரோ)

பலஸ்தீனத்தில் இயங்கிவரும் 13 பிரிவு இயக்கங்கள் ஒன்றிணைந்து நேற்று முன்தினம் எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளன.

இஸ்ரேலுடன்நிபந்தனையுடன்கூடிய யுத்த நிறுத்தம் ஒன்றை பிரகடனப்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்ந்து ஒரு இணக்கப்பாட்டிற்கு வரும் பொருட்டே இக்கூட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலுக்கும் பலஸ்தீனத்திற்கும் இடையே கடந்த மூன்று வருடங்களாக இடம்பெற்று வருகின்ற போட்டி வன்முறைகளை 3 நாள் தொடர்ந்து நடைபெறும் இக் கூட்டத்தின் மூலம் கட்டுப்படுத்த முடியும் என எதிர்பார்ப்பதாக பலஸ்தீன் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இரண்டு நாடுகளுக்கும் இடையில் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு யுத்தநிறுத்தம் மிக அவசியமானது எனப் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளும் 13 பலஸ்தீன இயக்கங்களின் பிரதிநிதிளகளும் கூறியுள்ளனர்.

பலஸ்தீனத்தில் இயங்கிவரும் இந்த இயக்கங்கள் இவ்வாறு ஒன்றிணைந்து சமாதானப் பேச்சுக்களை நடத்துவது இதுவே முதல் தடவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-2)

# பாதுகாப்பு ஊழியர் மர்ம மரணம்

(நியூயோர்க்)

நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் மூன்றாவது மாடிக் கட்டடத்தில் பணி புரியும் பாதுகாப்பு ஊழியர் ஒருவர் நேற்று முன்தினம் நண்பகல் மர்மமான முறையில் கொல்லப்பட்டுள்ளார்.

41 வயதான மைக்கேல் ஹால்டன் என்ற இப்பாதுகாப்பு ஊழியரின சடலத்திற்கு அருகே துப்பாக்கி ஒன்று காணப்பட்டதாகவும், அவரது உடலில் எந்தவொரு காயங்களும் காணப்படவில்லை எனவும் அக்கட்டடத்தில் பணிபுரியும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவரது மரணம் சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளதை அடுத்து விரிவான விசாரணைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (உ-2)

# நியூஸிலாந்துப் பிரஜைகள் வியட்நாம் செல்வதைத் தவிர்க்குமாறு கோரிக்கை

(வெலிங்டன்)

வியட்நாமில் பயங்கரவாத அச்சுறுத்தல்கள் அதிகம் இருப்பதால் அந்த நாட்டுக்கு செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுமாறும் தமது நாட்டுப் பிரஜைகளுக்கு நியூஸிலாந்து அறிவுறுத்தியுள்ளது.

ஏற்கனவே இந்த நாட்டில் இருக்கின்ற நியூஸிலாந்துப் பிரஜைகள் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும் என்றும் நியூஸிலாந்து கேட்டுள்ளது.

i நாடுகள் பங்குபற்றும் மெய்வல்லுநர்ப் போட்டி ஒன்றை வியட்நாம் ஏற்பாடு செய்துள்ள நிலையில் அங்கு பயங்கரவாதத் தாக்குதல்கள் நடப்பதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் இருப்பதாக கருதியே நியூஸிலாந்து மேற்கண்ட அறிவுறுத்தலை விடுத்துள்ளது. (உ-2)



உடல் ஊனமுற்றோர் தினத்தை முன்னிட்டு உக்ரைன் நாட்டில் நடைபெற்ற உடல் ஊனமுற்ற அழகிகளுக்கான போட்டியின் இறுதிச் சுற்றிற்கு தகுதி பெற்ற பெண்ணுடன் நடனமாடும் அவரது இணை.

# இந்தியாவில் உள்ள மலேசியத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம் செய்த 22 பேர் கைது

(சென்னை)

மலேசிய நீதிமன்றத்தால் இந்தியத் தமிழர்கள் 8 பேருக்கு வழங்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனையை இரத்துச் செய்யக் கோரி இந்தியாவில் உள்ள மலேசியத் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்திய 'லோக் ஜன சக்தி' என்ற அமைப்பைச் சேர்ந்த 22 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் வேலை தேடி மலேசியாவிற்குச் சென்ற இந்தியத் தமிழர்களில் 8 பேருககு மலேசிய நீதிமன்றம் கடந்த வாரம் தூக்குத்தண்டனை விதித்திருந்தது.

இவர்கள் 8 பேரும் போதை வஸ்து கடத்தினார்கள் என்று குற்றஞ்சாட்டியே இத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள போதும், அவர்கள் இக் குற்றச் செயல்களில் ஈடுபட்டிருக்கமாட்டார்கள் என்றும் இவர்கள் வேலைதேடியே சென்றவர்கள் எனவும் அவர்களை விடுவிக்க ஆவண செய்யுமாறும் கோரியே இந்த அமைப்பினர் நேற்று முன்தினம் தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டத்தை நடத்தியிருந்தனர்.

இதேவேளை, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட 8 இந்தியத் தமிழர்களையும் விடுவிக்கக் கோரி உலகத் தமிழர் பேரமைப்பு நாளைய தினம் சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக அறிவித்துள்ளது. (உ-2)



2 அடி உயரமான தென்கன்னடத்தைச் சேர்ந்த மைமூனா என்ற இப்பெண் எழுந்திருக்கவோ நடக்கவோ முடியாத ஊனம். இந்நிலையிலும் தன் வாழ்க்கையை செலுத்துவதற்காக பீடி சுற்றி வருமானம் ஈட்டி வருகின்றார் இவருக்கு பக்கபலமாக இவரது தாயார் ஆதரவு கொடுத்து வருகிறார்.

# பயணிகள் சென்ற ரயிலில் குண்டு வெடிப்பு; 15 பேர் பலி

(மொஸ்கோ)

ரஷயப் பயணிகள் ரயில் ஒன்றில் நேற்று குண்டு வெடித்ததில் 15 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 50 பேர் காயமடைந்துள்ளனர்.

ரஷ்யாவின் தெற்கு நகரான மினரலிற்கு அருகே இக் குண்டு வெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இக் குண்டு வெடிப்புச் சம்பவத்தை அடுத்து அப்பகுதிகளில் பதற்றம் நிலவியதால் அதனை தடுக்கும் நோக்கில் பாதுகாப்புப் படையினர் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தக் குண்டுத் தாக்குதலை நடத்தியவர்கள் யார் என்பது குறித்து எந்த தகவலும் வெளியாகாத நிலையில், முஸ்லிம் தீவிரவாதக் குழுக்களே இத்தாக்குதலை நடத்தியிருக்கக் கூடும் என ரஷ்யப் பாதுகாப்பு அமைச்சகம் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

இதேவேளை உயிரிழந்தவர்களையும், காயமடைந்தவர்களையும் மீட்கும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-2)

# பொலிவியப் பொலிஸாரால் 16 முஸ்லிம் இளைஞர்கள் கைது

(லாபாஸ்)

பொலிவியாவில் இருந்து அமெரிக்க விமானங்கள் மீது தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டிருந்த 16 முஸ்லிம் இளைஞர்களைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள அமெரிக்க விமானங்களைக் குறிவைத்துத் தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டிருந்தார்கள் என்று பிரான்ஸ் பொலிஸார் வழங்கிய தகவல்களை அடுத்தே பொலிவியப் பொலிஸார் இந்த சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

பொலிவியத் தலைநகரான லாபாஸில் இருந்து அமெரிக்கா செல்லும் விமானங்களையே இவர்கள் தாக்கத் திட்டமிட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

கைது செய்யப்பட்டவர்களில் 9 பேர் தீவிரவாதக் குழுக்களுடன் தொடர்புடையவர்கள் என்று பொலிவியப் பொலிஸார் கூறுகின்றனர். (உ-2)



பிரான்ஸில் பெய்த அடை மழையினால் நாட்டின் சில பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இதனால் மக்களின் சாதாரண வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. வெள்ள நீர் சூழ்ந்துள்ள வீட்டிற்குள் இருப்பவர்களை பத்திரமாக மீட்க பாதுகாப்பு படையினரின் படகு காத்திருக்கும் காட்சி.

# ஈக்குவடோர் ஜனாதிபதியை பதவி விலக்க இந்திய வம்சாவழியினர் முயற்சி

(மலபா)

ஈக்குவடோர் ஜனாதிபதி லூஷியோ ஹுட்டிகார் பதவி விலக வேண்டும் என்று அங்குள்ள இந்திய வம்சாவழியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

லூஷியோ பதவி யேற்கும் போது தங்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை இன்னும் நிறைவேற்றவில்லையென குற்றஞ்சாட்டியே இந்தக் கோரிக்கையை இந்திய வம்சாவழியினர் விடுத்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டினால் வறுமையில் வாடும் இந்திய வம்சாவழியினருக்கு தாம் நலன்கள் சார் சேவைகளை செய்வதாக ஜனாதிபதி லூஷியோ உறுதியளித்திருந்தார்.

எனினும் இதனபடி எந்தவொரு சேவையையும் இதுவரை அவர் செய்யவில்லையென்று அங்கு வறுமையில் வாடும் 12 மில்லியன் இந்திய வமசாவழியினரும் ஒன்றிணைந்து குற்றஞ்சாட்டியுள்ளனர். (உ-2)

# புகையிலைப் பாவனை உடல் நலத்திற்குப் பகை

உலகெங்கும் ஆண்டொன்றிற்கு 30 இலட்சம் பேர்கள் புகையிலையினால் இறக்கிறார்கள். நீண்ட காலமாக புகைப்பழக்கம் உள்ள மக்களை உடையநாடுகளில் 90 சதவீத நுரையீரல் புற்று நோய் மரணங்கள் நேரிடுகின்றன. பலவகைப் புற்றுநோய்களால் 30 சதவீத இறப்பு நேரிடுகிறது. 80 சதவீத நாள்பட்ட மூச்சுக்குழல் அழற்சி மற்றும் எம்பிசீமா போன்ற கேசுகள் புகையிலை உபயோகிப்பதனால்தான் உண்டாகின்றன. அதே சமயம் 20-25 சதவீத இதய நோய் மற்றும் ஸ்ட்ரொக் மரணங்கள் நேரிடுகின்றன.

மூச்சுக்குழல் தொடர்பான நோய்கள், வயிற்றுப் புண் மற்றும் கர்ப்பகால சிக்கல்கள் உட்பட எண்ணற்ற பிற ஏறுக்குமாறான உடல்நலக் கோளாறுகள் புகைப்பதனால் நேருகின்றன. கர்ப்பகாலத்தில் பெண்கள் புகைப்பிடிப்பதனால் பிறக்கும் குழந்தையின் எடை குறைவது முதற்கொணடு, கருச்சிதைவுகள், குறைப்பிரசவம், குழந்தை இறந்து பிறத்தல், பிறந்தவுடன் இறத்தல் போன்ற தொடர்ச்சியான பாதிப்புகள் உண்டாக வழியுண்டு. குழந்தை மிகக் குறைந்த எடையுடன் பிறந்தால் அது வெகுவிரைவில் இறக்க நேரிடும். என்பது தெளிவு. புகைக்கும் தாய்மார்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் உயிர் பிழைத்துக் கொண்டாலும், உடல் - மன - அறிவு வளர்ச்சியில் சேதமுற்றவையாக காலப்போக்கில் மாறும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. புகையிலை மெல்லுதல், பொடி போடுதல் போன்ற புகைக்காத வழிமுறைகளில் புகையிலையை உபயோகிப்பதனால் வாய்ப்புற்று பெருமளவில் உண்டாகின்றது. இது போன்ற புகையிலைப் பழக்கம் மிகுதியாக உள்ள நம் நாட்டிலும் பிற நாடுகளிலும் இது கண்கூடு.

### புகையிலையற்ற பணியிடங்கள் பாதுகாப்பானவை உடல்நலத்தை உயர்த்துபவை

புகைப்பதனால் தொழிலாளர்கள் தொழிலகங்களில் பல்வேறு பிரச்சினைகளுக்குள்ளாகின்றனர். சிலர் பிரச்சினையாளர்களாக மாறுகின்றனர். புகைக்காதவர்களை விட, புகைப்பவர்கள் பல்வேறு நோய் நொடிகளுக்கு வெகு சீக்கிரத்தில் ஆளாகிறார்கள். குறிப்பாக நாள்பட்ட நுரையீரல் அடைப்புநோய்கள், நுரையீரல் புற்றுநோய், இதய இரத்த நாள நோய் மற்றும் பல்வேறு அசௌகரியங்களைக் குறிப்பிடலாம். புகைப்பது புகைப்பவர்களுக்கு மட்டுமின்றி, புகைக்காதவர்களுக்கும் தீங்கு பயக்கின்றது. இப்படிப்பட்ட அபாயங்களை முன்னிட்டு பணியிடங்களிலும் வேறு பொது இடங்களிலும் புகைக்க அனுமதிப்பதனால் அங்கு உள்ள புகைக்காதவர்களுக்கும் கேடு நேரிடுகின்றது. எனவே, புகைக்காதவர்களின் சுதந்திரத்தைப் பாதுகாக்க உலகளாவிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கருத்து நாளுக்குநாள் பெருகி வருகின்றது.

### பணியிடங்களில் புகைப்பதனால் ஏற்படும் உடல்நல பாதிப்புக்கள்

புற்றுநோய்கள், நாள்பட்ட மூச்சுக்குழல் - நுரையீரல் அடைப்பு நோய்கள், இதய - இரத்த நாள நோய்கள் போன்றவற்றிற்கு புகையிலை உபயோகமே பொறுப்பாக உள்ளது. வேலையின்போது நேரிடும் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும் செயல்கள். சிற்சில நோய்களை உண்டாக்கி மனநிலை திரிபையும், இறப்பையும் கூட விளைவிக்கின்றன. பணியிடங்களில் நேரிடும் அபாயங்களும் விபத்துக்களும் வேலையில் புகைப்பதை விட்டுப் பிரிக்க முடியாதவை மனிதனுடைய உடல்நலத்தைக் கெடுக்க புகைப்பது பணியிடங்களில் உற்பத்தியாகும் கெடுதல் பயக்கும் பொருட்களும் பல வழிகளில் இணைந்து செயலாற்றுகின்றன.

### கட்டாயப் புகைத்தல்

மூடிய அறைகள் மற்றும் கட்டடங்களில் பணியாற்றும் அலுவலக ஊழியர்களுக்கு அங்கு நிலவும் புகைமண்டலத்தில் நேரிடும் கட்டாயப் புகைத்தல் அபாயம் நேரிடுகின்றது.

பெரும்பாலானவர்கள் தங்கள் நேரத்தில் பெரும் பகுதியை வெளிப்புறங்களில் கழிப்பதில்லை. எனவே, வீடு மற்றும் அலுவலகங்களின் உட்புறங்களில் உள்ள புகை மண்டலங்களால் மோசமான உடல்நலப் பிரச்சினைகளுக்கு ஆளாகின்றனர். புகைத்தலில் இரு வகை உண்டு. ஒன்று தானே புகைத்தல் மற்றது மற்றவர்கள் புகைத்து வெளியேற்றியதை உள்ளிழுத்தல். மற்றவர் புகைத்து விட்ட புகை மண்டலம் வீடுகளிலும், அலுவலகங்களிலும் இருக்கையில் அதை உள்ளிழுக்கும். புகைககாதவர்களுக்குப் பின் வரும் உடல்நலப் பாதிப்பு நேரிடலாம்.

★ நுரையீரல் புற்றுநோய்

★ மூச்சப் பாதையில் சீர்கேடும் நோயும்

சிறு பிள்ளைப் பருவத்திலேயே கூட கடுமையான மூச்சுப்பாதைக் கோளாறுகள் நேரிடும். நாள்பட்ட இருமல், கபம் (கோளைக்கட்டு) மற்றும் சிறுவர் இடையே ஊசு மூச்சு சிறுவரிடையே நாள்பட்ட நடுச்செவி ஒழுகல், சிறியோர் பெரியோர் அனைவரிடமும் நுரையீரல் வளர்ச்சிக் குறைபாடு மற்றும் நுரையீரல் இயக்கக் குறைபாடு, ஆஸ்துமா, ஆஸ்துமா நோயாளிகளிடையே நுரையீரல் இயக்கக் குறைபாடு.

★ கண், மூக்குத் தொண்டைப் பகுதிகளில் எரிச்சலூட்டும் விளைவுகள்.

★ சிறு பிள்ளைகளின் வளர்ச்சிக் குறைபாடுகள், பிறப்பு எடை குறைவு, நுரையீரல் முதிர்ச்சி, மந்தம், வயதுக்கேற்ற உயரத்தை எட்டிப்பிடிக்க முடியாமை.

★ இதய நோய் கட்டாயப் புகைத்தல் இதயநோய் அபாயத்தைப் பெருக்குகின்றது.

ஆஸ்துமா, மூச்சுக்குழல் அழர்ச்சி, இதய - இரத்த நாளநோய், மூக்குத் துவாரங்களில் அழர்ச்சி, சளி மற்றும் ஒவ்வாமைகள் (அலர்ஜி) போன்ற உடல்நலக் கோளாறுகள் உள்ள நபர்கள் கட்டாயப் புகைத்தலினால் தங்கள் உடல்நலம் மேலும் கடுமையாகச் சீர்கெட்டு விடுவதாகக் குறிப்பிடுகின்றனர்.

### வேலை நேரத்தில் புகைத்தல் ஒரு பொருளாதாரச் சுமை

வேலை செய்யும் இடங்களில் புகைப்பது தொழிலாளர்களின் உடல் நலத்திற்குத் தீங்காக அமைவது மட்டுமன்றிப் பொருளாதாரச் சுமையாகவும் இருக்கின்றது. இப்பொருளாதாரச் சுமை, புகைப்பவர், புகைக்காதவர் தொழில் முனைவோர் மற்றும் சமுதாயம் என எல்லாப் பிரிவினரையும் சேர்ந்தே தாக்குகின்றது. இதனால், தவிர்க்க முடியாத பெருஞ் செலவுகள் உண்டாகின்றன. வேலை செய்யும் இடங்களில் புகைப்பதைக் கட்டுப்படுத்துதல் தொழிலாளர்களின் உடல் நலத்தை மேம்படுத்துவது மட்டுமன்றி புகைப்பதனால் ஏற்படும் செலவுகளையும் குறைக்கின்றது. □

---

# வடமராட்சிப் பகுதியில் 3 இடங்களில் வான் தோண்ட படைத்தரப்பு அனுமதி

## நீண்ட கால இழுபறிக்கு நேற்றுடன் தீர்வு

(திருநெல்வேலி)

வடமராட்சிப் பருத்தித்துறைப் பகுதியில் மூன்று இடங்களில் வான் தோண்டுவதற்கு இராணுவத்தின் 524 வது படையணித் தலைமையகம் நேற்று அனுமதி வழங்கியுள்ளது.

மேற்படி பகுதியில் உள்ள இன்பருட்டி, சுப்பர்மடம் மற்றும் சக்கோட்டை ஆகிய இடங்களில் வான் தோண்டுவதற்கு படைத்தரப்பு வழங்கிய அனுமதியை அடுத்து இப் பகுதிகளில் வான் தோண்டும் பணிகள் நேற்று முதல் மிக மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

கடந்த 20 வருட காலமாக இப்பகுதிகளில் வான் தோண்ட முடியாத நிலை இருந்து வந்தது. இதனால் இப்பகுதி மீனவர்கள் தமது படகுகளை தரித்து நிறுத்துவதற்குப் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இதனையடுத்து அப் பகுதிகளில் வான் தோண்டுவதற்கு மீனவர் தரப்பில் எடுத்துவந்த முயற்சிகளுக்குப் படைத்தரப்பு கடந்த 3 வருட காலமாக முட்டுக்கட்டையாக இருந்து வந்தது.

இது விடயத்தைத் தெளிவுபடுத்தி வடமராட்சி கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கு மகஜர்களை அனுப்பியிருந்தது.

இதேவேளை, நேற்று முந்தினம் இராணுவத்தின் 524ஆவது படைத் தலைமையகத்தினருக்கும் அப்பகுதி மீனவர்களுக்கும் இடையிலான சந்திப்பொன்றுக்கு படைத்தரப்பு மீனவர்களுக்கு அழைப்பு விடுத்திருந்த போதிலும், தமது பிரச்சினைகளுக்கு தீர்வு எதுவும் கிடைக்காதவரை தாம் இவ்வாறான சந்திப்புகளில் கலந்து கொள்ள முடியாது எனக் கூறி மீனவர் தரப்பு இச் சந்திப்பைப் பகிஷ்கரித்தது.

இந்நிலையில், நேற்றைய தினம மேற்படி மூன்று பகுதிகளிலும் வான் தோண்டுவதற்குப் படைத்தரப்பு அனுமதி வழங்கியுள்ளது.

மேற்படி மூன்று பகுதிகளிலும் வான் தோண்டுவதற்கான அனுமதியை இராணுவத்தின் 524 ஆவது படையணித் தளபதி கேணல் கே. எஸ்.ரத்நாயக்க மற்றும் பிரிகேடியர் வி.சந்திரசிறீ ஆகியோர் நேரடியாக வழங்கியதுடன், இப்பகுதிகளில் முருகைக் கற்பாறைகளைத் தோண்டுவதற்கு பொதுமக்களுக்கும் அனுமதி வழங்கியுள்ளனர்.

இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி யு.எல்.எஸ். புறொன்ஹ்ரிஸ் மற்றும் இலங்கை போர்நிறுத்த கண்காணிபுக்குழுவின் கடற் கண்காணிப்பாளர் போல் எரிக்கார், மீன்பிடித் திணைக்கள அதிகாரி ஏ.ஜோசேப் ஆகியோர் இவ் வான் தோண்டும் இடங்களில் பிரசன்னமாகியிருந்தமையை அவதானிக்க முடிந்தது.

சுப்பர்மடம் மற்றும் இன்பருட்டிப் பகுதிகளில் முதற்கட்டமாக பொதுமக்கள் மற்றும் மீனவர்களால் வான் தோண்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதும இதற்கான ஆளணிப்பற்றாக்குறை காரணமாக படையினரும் இவ்வான் தோண்டும்பணிகளில் அவர்களுக்கு உதவியாக தற்போது ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பாக 524 வது படையணித் தளபதி கேணல் கே.எஸ். ரத்னாயக்க அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

தற்போது யுத்தநிறுத்த சூழ்நிலை இங்கு உள்ளதால் பொது மக்கள் மேற்கொள்ளும் அபிவிருத்தப் பணிகளில் நாம் கூடிய அக்கறை செலுத்தி வருகின்றோம். தற்போதைய யுத்த நிறுத்தம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு நிரந்தர சமாதானம் இங்கு மலர்வதே எமது விருப்பமாகும் எனக் குறிப்பிட்டார்.(உ-43)

---





## யார் இந்த மீனா?

என்னைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புங்கள் என்று மீனா தன் பெற்றோரிடம் மன்றாடுகின்றாள். 'பெண் பிள்ளைகள் பாடசாலைக்குப் போகத் தேவையில்லை' என அவளின் தந்தை பதிலளிக்கின்றார். தாயும் அதனையே சொன்னார். மீனாவுக்கு ஒரே துக்கம். அவளுடைய தம்பி ராஜ' பாடசாலைக்குப் போகலாம் என்றால் அவள் ஏன் போகக்கூடாது? படிக்கவேண்டும் என்ற உறுதி மீனாவிற்கு ஏற்படுகின்றது. படிப்பதற்கு புதிய வழி ஒன்றினை அவள் கண்டு பிடிக்கின்றாள். மித்துவை பாடசாலைக்கு அனுப்புகின்றாள். அது ஆசிரியை படிப்பிப்பதைக் கேட்டுக்கொண்டு வந்து மீனாவுக்குச் சொல்லிக் கொடுத்தது. புத்திசாலியான் மித்து மீனாவுக்கு என்ன கற்றுக்கொடுத்தது. இவ்விதம் தந்தையின் கோழிக்குஞ்சுகள் சில குறைவதனை மீனா கண்டுபிடிக்கின்றாள். அவளை எல்லோரும் பாராட்டுகின்றனர்.

பெண் பிள்ளைகள் படிப்பதன் முக்கியத்துவத்தினைக் கிராம வாசிகள் ஏற்றுக்கொள்கின்றனர். பாடசாலைக்குப் போகும் மீனாவின் கனவு நனவாகின்றது.

★ ஆண் பிள்ளைகளைப் போன்றே பெண் பிள்ளைகளுக்கும் கல்வி கற்கும் உரிமை உண்டு.

★ பாடசாலைக் கல்வி பெண் பிள்ளைகளுக்கு நல்ல வருங்காலத்தைக் கொடுக்கின்றது.

★ கல்வி கற்பது பிள்ளைகளின் வாழ்க்கையை வளம்படுத்துவதோடு அவர்களைச் சுற்றவுள்ள மக்களுக்கும் நன்மை பயக்கிறது.

★ பிரச்சினைகளுக்கு அடிபணிவதனை விட அவற்றை கையாள்வதற்கான வழிகளை கண்டுகொள்ளுவது சிறந்தது.



உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:-

அறை எண் - 30,
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

unicef (C/6946)



## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி

### அறிவித்தல்

### நுளம்பு வலைகளுக்கு மருந்து தோய்த்தல்

எதிர்வரும் 10.12.2003ம் திகதி புதன்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் நீர்வேலி கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்தில் நுளம்பு வலைகளுக்கு மருந்து தோய்க்கும் செயற்பாடு சுகாதார திணைக்களத்தால் நடாத்தப்படவுள்ளதால், மேற்படி செயற்பாட்டில் கலந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி.
05.12.2003

க. வெங்கடாசலம்
செயலாளர்

# மகாவம்சம்

## தரும் இலங்கை வரலாறு

கலாநிதி க.குணராசா
(செங்கை ஆழியான்)

34

### பன்னிரண்டு மன்னர்கள்

மகாவம்சத்தின் 35 ஆவது (XXXV) அதிகாரத்தில் இலங்கையை அரசாட்சி செய்த பன்னிரண்டு மன்னர்கள் பற்றிய குறிப்புகள் உள்ளன. மகாதாடி மகாநாகனின் மரணத்தின் பின்னர் **ஆமண்டகாமினி** அபயன் முடிசூடி, ஒன்பதாண்டுகள் எட்டு மாதங்கள் அரசாண்டான். (கி.பி.78-கி.பி.88)அவனைக் கொன்று, அனுராதபுர சிம்மாசனத்தில் அவனது தம்பி **கனிராஜானுதீசன** என பான் அரியணை ஏறினான். அவனுடைய காலத்தில் சேத்தியபர்வத விகாரையில் (மிகுந்தலை)உள்ள உபோசத மண்டபத்தில், நீண்டகாலமாக நடவாதிருந்த சமய விழாவொன்றினை மீண்டும் நடத்த விரும்பிய போது, அங்குள்ள பிக்குகளிடையே இருவித கருத்து நிலையேற்பட்டது. விரும்பாத பிக்குகள் அறுபது பேர் அரசனைச் சிறைப்பிடிக்க முயன்றனர். அவர்களிடமிருந்து தப்பிய மன்னன், பின்னர் அந்த அறுபது பிக்குகளையும் சிறைப்பிடித்து, சேத்தியபர்வதத்தில் உள்ள கணீரா என்ற செங்குத்துப் பாறையினின்றும் தள்ளிவிழுத்திக் கொன் றான் என மகாவம்சம் கூறுகிறது.

அவனுக்குப் பின்னர் ஆமண்டகாமினி அபயனின் மகன் **குளாபயனும** ஓராண்டும், அதன் பின் அவனது சகோதரி **சிவலி** நான்கு மாதங்களும் அரசாண்டனர் . குளாபயன், கொணாநதி மருங்கில் சூளகல் விகாரையைக் கட்டுவித்தான். சிவிலியின் பின் ஆமண்டகாமினியின் மருமகனான **இளநாகன** என்பான் அனுராதபுரத்தின் சிம்மாசனத்தில் ஏறினான். அவனது முடிசூட்டுவிழா ஊர்வலம் திஸ்ஸ குளக்கரையோரமாகச் சென்ற போது அங்கு குழுமி நின்ற இலம்பக்கர்ணர்கள் (ஒரு குழுமப்பிரிவு) அங்கு நின்று மன்னனுக்கு மரியாதை செய்யாது தலைநகருக்கு சென்றுவிட்டனர். இதனை அவதானித்த மன்னன் இலம்பக்கர்ணர்களை தண்டிக்கும் நோக்குடன மகாதூபி குளக்கரையூடாகச் செல்கினற வீதிய்ய சண்டாளர்களின் மேற்பார்வையில் இடுமாறு கட்டளை பிறப்பித்தான். இதனால் அவமானப்பட்ட இலம்பக்கர்ணர்கள் ஒன்றுசேர்ந்து கலகம் செய்து இளநாகனைக் கைப்பற்றிச் சிறையில் இடடு ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டனர். இளநாகன் சிறையில் இருந்து தப்பி மகாதீர்த்தத்தை அடைந்து இந்தியாவுக்குத் தப்பியோடி அங்கு படையுதவி பெற்று உருகுணைக்கு வந்து அங்கும் படைகளைத் திரட்டி இலம்பக்கர்ணர்கள் மீது தண்டெடுத்தான். இரு பகுதியினருக்கும் நிகழ்ந்த யுத்தத்தில் இளநாகன் வெற்றிபெற்றான். இலம்பக்கர்ணத் தலைவர்களைக் கொல்ல எண்ணியும், அவ்வாறு செய்யாது தனது தேரின் நுகத்தடியில் இருவரைப் பூட்டி இழுக்குமாறு செய்தான். இன்னும் இருவரை தேரைத்தள்ளி வருமாறு பணித்து நகரத்திற்குள் நுழைந்தான். அரண்மனை வாயிலை அடைந்ததும். அந்தத் தலைவர்களின் தலைகளைத் துண்டித்து விடுமாறு சேவகர்களுக்கு கட்டளை பிறப்பித்தான். தாயின் குறுக்கீட்டால் அவர்களின் மூக்குகளையும் கால்விரல்களையும் அரிந்து நீக்கித் தண்டனை வழங்கினான்.

இளநாகனுக்குப் பின்னர் அவனுடைய மகன் **சந்தமுகசிவா** எட்டாண்டுகளும் ஏழு மாதங்களும் அரசாண்டான். சந்தமுகசிவாவின் பட்டத்து மக்சியின் பெயர் **தமிழதேவி** ஆகும். இசர சமண விகாரைக்குத் தனது நில வருமானங்களைத் தமிழதேவி வழங்கியுள்ளாள். சந்தமுக சிவாவுக்குப் பின்னர் அவனுடைய சகோதரன் **யசலாலகதீசன்** மணிமுடி தரித்தான். இவன் ஒரு விசித்திரமான வினையான விளையாட்டினைப் புரிந்தான். தன்னைப் போலிருந்த **சுபா** என்ற வாயிற் காப்போனை அரச ஆடைஅணிகளை அணிவித்து தன் சிம்மாசனத்தில் இருத்தியும் தான் சுபாவின் ஆடைகளை அணிந்து வாயிற் காப்போனாக மாறியும் அரண்மனை அமைச்சர் முதலோரை ஏமாற்றி வந்தான். ஒருநாள் சிம்மாசனத்தில் இருந்த சுபா வாயிற்காப்போன் வேடத்தில் இருந்த மன்னனை பிடித்து சிரச்சேதம் செய்துவிடுமாறு கட்டளையிட்டான். அவ்வாறே நடைபெற்று முடிந்தது. அதன் பின் **சுபராஜா** என்ற நாமத்தோடு ஆறாண்டுகள் அவன் அரியாசனத்திலிருந்தான். இந்த **சுபராஜா** மூன்று விகாரைகளைக் கட்டுவித்துள்ளான்.



சுபராஜாவின் ஆட்சிக்காலத்தில் சோதிடர்கள் ''அவனுக்குப் பின்னர் **வசபன்** என்பான் மன்னனாவான்'' என அறிவிக்க மன்னன் வசபன் என்ற பெயருடைய அனைவரையும் கொன்று விடுமாறு கட்டளை பிறப்பித்தான். இலம்பக்கர்ண மரபினைச் சேர்ந்த **வசபன்** என்றொருவன் உத்தரதேசத்தில் (வடபகுதி) தனது மாமனாரான படைத்தளபதி ஒருவனிடம் பணியாற்றி வந்தான். மன்னனின் அறிவித்தலைக் கேட்ட படைத்தளபதி தனது மருமகளை மன்னனிடம் ஒப்படைப்பதன் மூலம் பரிசில்கள் பெற எண்ணங் கொண்டான். வசபனையும் மனைவி **பொத்தாவையும** அழைத்துக் கொண்டு அரசனின் அரண்மனைக்கு ஒருநாள் அதிகாலை வந்தனர். வசபனையும் மனைவியையும் வாசலில் நிறுத்திவிட்டு படைத்தளபதி உள்ளே சென்றதும் மனம் பொறுக்காத படைத்தளபதியின் மனைவி ஆயிரம் பொற்காசுகளை வசபனிடம் கொடுத்து ஓடித்தப்புமாறு துரத்திவிட்டாள். வசபன் மகாவிகாரையில் தஞ்சம் புகுந்து அங்குள்ள தேரர்களினால் உணவு உடை அளிகக்ப்பட்டு உருகுணைக்கு அனுப்பப்பட்டான். அங்கு படைதிரட்டிய வசபன் சுப ராஜாவை போரில் வெற்றி கொண்டு மாமனையும் அழித்தான். பின்னர் தனக்குதவிய **பொத்தாவை** பட்ட மகசியாக்கி அரனாகினான். மீண்டும் ஒரு தடவை இலம்பக்கர்ணவம்சம் அரசகட்டிலேறியது. வசப னின் பின்னர் அவனது மகனான **வங்கநாசிகதீசன** அரசனானான் கொணாநதியருகில் அவனும் மகாமான்கல எனும் விகாரையைக் கட்டுவித்தான். அவனுக்குப்பிறகு அவனது மகன் **கஜபாகு காமினி** முடிதரித்து இருபத்திரண்டு ஆண்டுகள் ஆண்டான்.

கஜபாகு இலங்கை வரலாற்றில் முக்கியமான ஒரு மன்னனாகவுள்ளான். கஜபாகு தன் தாயார் **மகாமாதாவின** பெயரால் **மதுவிகாரையை** அமைப்பித்தான். அபயகிரி விகாரைக்கு உதவும் முகமாக **காமினிதிஸ்ஸகுளம்** அமைத்துக் கொடுத்தான். கஜபாகுவிற்குப் பின்னர் அவனது மாமன் **மாகல்லநாகன்** ஆறு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். இவன் ஏழு விகாரைகளைக் கட்டுவித்தான். அவற்றுள் நாகதீபத்தின் சாலிபர்வத விகாரை குறிப்பிடத்தக்கது என்கிறது மகாவம்சம்.

(தொடரும்)

# பிரசவ லீவை 6 மாதமாக நீடிப்பது பற்றி ஆலோசனை

(கொழும்பு)

தாய்மார்களுக்கான பிரசவ லீவை நீடிப்பது பற்றியும் தந்தைமார்களுக்கு விசேட லீவு வழங்குவது பற்றியும் ஆராய்ந்து வருவதாக பொது நிர்வாக சேவைகள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் தனது அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தில் பேசிய அமைச்சர்,

தாய்மார்கள் தங்கள் குழந்தைகள் மீது போதிய கவனம் செலுத்துவதற்காக இந்த லீவை வழங்குமாறு ஜே.வி.பி எம்.பி லால்காந்தா கேட்டுக்கொண்டதற்கிணங்க மேற்படி ஆராய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வழமையான 3 மாத லீவை 6 மாதமாக அதிகரிக்குமாறு தந்தைமார்களுக்கு 2 வாரம் விசேட லீவு வழங்குவது பற்றியும் லால்காந்தா கேட்டிருந்தார்.

அமைச்சர் அபேவர்த்தன இவ் விடயம் பற்றி மகளிர் விவகார அமைச்சுடனும், தொழிற்சங்கங்கள், ஜே.வி.பியினருடனும் விரைவில் கலந்துரையாடவுள்ளார். (உ-6)

# மந்திரி மலைக்கிராம மேம்பாட்டுக்கு மந்திரி மகேஸ்வரன் நடவடிக்கை

(நவக்கிரி)

ஆவரங்கால் மேற்கில் உள்ள மந்திரிமலைக் கிராமத்தில் வசிக்கும் வறிய மக்களுக்கு வீடுகள் மற்றும மலசல கூடங்களை அமைத்துக் கொடுக்க இந்து கலாசார அமைச்சு முன்வந்துள்ளது.

மிகவும் வறிய நிலையில், அடிப்படை வசதிகள் எதுவுமின்றி வாழ்ந்து வரும் இக் குடும்பங்களின் அவல நிலை பற்றி இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரனிடம் சம்பந்தப்பட்டவர்கள் முறையிட்டதைத் தொடர்ந்து அவர் நிலைமைகளை நேரில் சென்று அவதானித்துள்ளார்.

இதன் பிரகாரம் 75 வறிய குடும்பங்களுக்கு வீடுகள் மற்றும் மலசல கூடங்கள் அமைப்பதற்கேற்ற பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, அண்மையில் 210 சீமெந்துப் பைக்கற்றுகள் வழங்கப்பட்டிருப்பதுடன் வீடுகளுக்கான அடிக்கல் நாட்டல் அடுத்த வாரம் இடம்பெறவுள்ளது.

(உ-233)

# ஹற்றனில் 3 தினங்கள் மலையகத் தமிழ்க் கூடல்

(கொழும்பு)

மலையகத் காலைப்பண்பாட்டு மன்றத்தின் ஏற்பாட்டில் மலையக தமிழ்க் கூடல் 2003 நிகழ்வு எதிர் வரும் 19ஆம் திகதி முதல் 3 தினங்களுக்கு ஹற்றன் புனித பொஸ்கோ கல்லூரியின் தோமஸ் மண்டபத்தில் இடம் பெறவுள்ளன.

மூன்று நாட்கள் தொடர்ச்சியாக இடம்பெறவுள்ள இக்கலைக்கூடல் நிகழ்வில் கல்வி, பொருளாதாரம் இலக்கியம் மற்றும் அரசியல் ஆகிய விடயங்களில் அமர்வுகள் இடம் பெறவுள்ளன.

கல்வி மற்றும் பொருளாதாரம் சார்ந்த அமர்வுகள் எதிர்வரும் 19 ஆம் திகதியும் இலக்கிய அமர்வுகள் 20ஆம் திகதியும் அரசியல் அமர்வுகள் 21ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

மேற்படி மலையக தமிழ்க்கூடல் நிகழ்வில் பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் எம்.சிவக்குமார், துணைச் செயலாளர், மலையக கலைப்பண்பாடு மன்றம், இல. 86,சைட் வீதி, ஹறறன்'' எனும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது

(உ-18)

# வலுவிழந்தோர் தினத்தை ஒட்டிய ஆக்கத்திறன் போட்டி முடிவுகள்

(ஊர்காவற்றுறை)

சர்வதேச வலுவிழந்தோர் தினத்தையொட்டி ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவினால் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டி முடிவுகள் வருமாறு,

கட்டுரைப்போட்டி

1ஆம்இடம்: க.ஷோபா-கரம்பொன் சண்முகநாதன் ம. வி.
2ஆம்இடம்: ஸ்ரீ.நிரோஜினி - கரம்பொன் சண்முகநாதன் ம. வி.
3ஆம்இடம்: ம.தர்மா-கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தி.

கவிதைப்போட்டி

1ஆம்இடம்: எ.நித்திய கல்யாணி-கரம்பொன் சிறிய புஸ்பம்மகளிர் வித்தி.
2ஆம்இடம்: அ.சுபாசினி-கரம் பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தி.

சமூக சேவைகள் திணைக்கள அனுசரணையுடன் அண்மையில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் இடம் பெற்ற சர்வதேச செயலகத்தில் இடம்பெற்ற சர்வதேச வலுவிழந்தோர் தின விழாவில் வைத்து உதவி அரசாங்க அதிபர் ஜே.எகஸ். செல்வநாயகம் இவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.

(உ-75)

# வரவு செலவுத்திட்டத்தை எதிர்த்து பரவலாக ஆர்ப்பாட்டங்கள்

## மலையகத்தில் நடத்த ஏற்பாடு

(கொழும்பு)

தற்போது சமர்ப்பிக்கப்படவுள்ள வரவு செலவுத்திட்டத்தை எதிர்த்து இம்மாதம் நடுப்பகுதியில் மலையகமெங்கும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடாத்தப்படவுள்ளன.

கடந்த மாதம் சமர்ப்பிக்கப்பட்ட ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தின் மூன்றாவது வரவு செலவுத் திட்டத்தில் மலையகத் தோட்டத் தொழிலாளர்கள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்தே இவ் ஆர்ப்பாட்டப் பேரணிகள் மலையகப் பகுதியெங்கும் பரவலாக நடாத்தப்படவுள்ளதாக இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் தலைவர் டி.வி.சென்னன் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் அரசாங்க ஊழியர்கள் அனைவருக்கும் அடுத்த ஆண்டு முதல் சம்பள உயர்வு வழங்குவது தொடர்பாக தற்போதைய வரவு செலவுத்திட்டத்தில் முன் மொழியப்பட்டுள்ள போதிலும் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம் குறித்து எதுவித விடயமும் அதில் குறிப்பிடப்படவில்லை.

இதனால் கட்சி மற்றும் இனம் என பனவற்றைக் கருத்தில் கொள்ளாது அனைவரும் ஒன்றிணைந்து பதுளை, பண்டாரவளை, அப்புத்தளை, நுவரெலியா, ஹற்றன், பொகவந்தலாவ, மஸ்கெலியா மற்றும் தலவாக்கலை ஆகிய பிரதான நகரங்களில் இவ் ஆர்ப்பாட்டப் பேரணிகள் இம்மாத நடுப்பகுதியில் நடாத்தப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-18)

## சிறுவிளம்பரம்


### வகுப்புகள்

ஆண்டு 1ல் இருந்து 11வரை சகல பாடங்களும் மற்றும் **SPOKEN ENGLISH, GRAMMAR** மேற்படிப் புவரை எல்லா வகுப்புகளிலும்கூடியது 15 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர். எல்லாப் பாடங்களிலும் தனித்தனிக் கவனம் கொடுக்கப்படும். 426 (302), **K.K.S.** வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு விக்னேஸ்வரன் ஆச்சாரி. (7799)

### கணனிப் பயிற்சி

சல்லாலையில் அமைந்துள்ள அகதிகள் புனர்வாழ்வு நிறுவன முயறசிப் பிரிவினரால் நடத்தப்படும் இலவச கணனிப்பயிற்சிக்கான புதிய பிரிவுகள் எதிர்வருமு 15திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன. (உ-58)


## படையினரின் செயற்பாடுகளுக்கு குந்தகமாம்!

# தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு நலன் விரும்பிகள் செல்லத்தடை

(திருநெல்வேலி)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு நலன் விரும்பிகள் எவரையும் அழைக்கக் கூடாது என படைத்தரப்பினர் அச்சுறுத்தல் விடுத்துள்ளனர்.

மேற்படி பணிமனையானது இராணுவத்தினரின் அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்திருக்கின்ற காரணத்தினால் அங்கு ஏற்ற அடிப்படை வசதிகளோ உபகரண வளங்களோ கிடையாது.

இக் குறைபாடுகளை ஓரளவுக்காவது நிவிர்த்தி செய்யும் வகையில் சர்வதேச தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள் ஆகியோரை அழைத்து தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நிர்வாகத்தினர் நேரில் விளக்கமளிப்பது வழக்கம்.

இவ்வாறு புதியவர்களை அழைத்து வருவதானது தமது பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அச்சுறுத்தலாக இருப்பதால் இனிமேல் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாம் என படைத்தரப்பினர் நேற்று முன்தினம் மேற்படி நிர்வாகத்தினருக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

இதையும் மீறி நலன் விரும்பிகள் யாராவது அழைத்து வரப்படுவார்களானால், அவர்கள் சோதனைச் சாவடியில் வைத்தே திருப்பி அனுப்பப்படுவார்கள் எனவும், இவ்வாறு செய்யும் பட்சத்தில் பொதுமக்களுக்கும் தமக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்பட்டு அது இருதரப்பு உறவில் விரிசலை ஏற்படுத்துவதற்கு வழி வகுபபதை தாம் விரும்பவில்லை எனவும் படைத்தரப்பினர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-43)

# சுங்க, கலால் ஊழியர்கள் போராட்டம் தொடர்கிறது

(கொழும்பு)

சுங்கம் மற்றும் கலால் திணைக்களத் தேசிய வருமான வரி ஊழியர்கள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்துள்ள தொழிற்சங்கப் போராட்டத்தால் மேற்படி திணைக்களங்களின் வழமையான பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தமது முக்கிய கோரிக்கையான சுங்க அதிகாரிகளின் ஆலோசனை இன்றி அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தேசிய வருமானவரிச் சட்டமூலததை நீக்கும்வரை போராடடம் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இப் போராட்டத்தை கைவிடுமாறும் தேசிய வருமான அதிகாரசபை தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் குறித்து கலந்துரையாடுவதற்கு தீர்மானம் எடுக்கக்கூடிய அரச தரப்பு பிரதிநிதி ஒருவர் தங்களுடன்பேச வேண்டும் என தொழில் சங்க முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

ஆனாலும் இவ்விடயம் தொடர்பாக நிதி அமைச்சின் செயலாளர், ஆலோசகர் ஆர்.பாஸ்கரலிங்கம், பிரதிநிதி அமைச்சர் பந்துல குணவர்த்தன ஆகியோர் கலந்துரையாடிய போதிலும் எதுவித முடிவுகளும் எட்டப்படவில்லை.

இதேவேளை, நிதி அமைச்சின் ஆலோசகர் ஆர.பாஸ்கரலிஙகத்துடன் இன்று இதுதொடர்பாக காலை மீண்டுமொரு பேச்சு வார்த்தை நடைபெற்றது.

எனினும், நிதி அமைச்சர் கே. என்.சொக்ஸி இப் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டால் மாத்திரமே இப் பேச்சுவார்த்தைகளில் தாம் கலந்துகொள்ளப் போவதாக தொழிற் சங்க முன்னணி அறிவித்துள்ளது. (தி-61)

# அமெரிக்க சனத்தொகை நிறுவனம் இலங்கையின் திட்டமிடலுக்கு பாராட்டு

(அமெரிக்கா)

இலங்கை தனது திட்டமிடல் நடவடிக்கைகளின் ஒழுங்குபடுத்தல செயன்முறையின் மூலம் சனத்தொகை வளர்ச்சி வீதத்தை குறிப்பிட்ட ஒரு மட்டத்திலேயே தக்கவைத்துள்ளது. இலங்கையின் இச் செயற்பாடுகள் மிகவும் பாராட்டுதற்குரியது.

அமெரிக்காவின் சனத்தொகை நிறுவனப் பணிப்பாளர் வோர்னர் போனோஸ் இவ்வாறு பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க சனத்தொகை நிறுவனத்தின் சிறந்த சனத்தொகை அறிக்கை தொடர்பான 24வது உலக ஊடக விருது வழங்கும் வைபவத்தில் இடம் பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டின் போதே வோர்னர் போனோஸ் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் இது குறித்து கருத்து வெளியிடுகையில்,

இலங்கையின் திட்மிடல் நடவடிக்கைகள் மிகவும் சிறப்பானவை. இதனாலேயே இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதம் எப்போதும் ஒரே மட்டத்தில் இருந்து வருகின்றது.

அண்மைய தரவுகளின்படி 19.5 மில்லியனாக உள்ள இலங்கையின் தற்போதைய சனத்தொகை, 2025ஆம் ஆண்டில் 21.7மில்லியனாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்ற போதிலும், இலங்கையின் குடும்பத் திட்ட நடைமுறைகளின் அடிப்படையில் எதிர்வரும் 2050ஆம் ஆண்டில் சனத்தொகையை 21.4மில்லியனாக கட்டுப்படுத்த முடியும்.

இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி வீதத்தை எப்போதும் இஸ்திரநிலையில் வைத்திருப்பதற்கு 15 வயதிற்குக் குறைவானவர்களின் எதிர்காலத் தீர்மானமே நேரடியாகத் தாக்கம் செலுத்துகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார். (உ-18)



# இலங்கையின் வெற்றிக்கு வழிவகுத்த நஷார் முகமட்

கைவிடுமாறும் தேசிய வருமான அதிகாரசபை தொடர்பான அமைச் சரவைப் பத்திரம் குறித்து கலந்துரை யாடுவதற்கு தீர்மானம் எடுக்கக்கூடிய அரச தரப்பு பிரதிநிதி ஒருவர் தங்க

களில் கலந்துகொண்டால் மாத்திரமே இப் பேச்சுவார்த்தைகளில் தாம் கலந்துகொள்ளப் போவதாக தொழிற் சங்க முன்னணி அறிவித்துள்ளது.

(தி-61)

போனோஸ் இவ்வாறு பாராட்டுத் தெரி வித்துள்ளார்.

அமெரிக்க சனத்தொகை நிறவனத் தின் சிறந்த சனத்தொகை அறிக்கை தொடர்பான 24வது உலக ஊடக

தொகை வளர்ச்சி வீதம் எப்போதும் ஒரே மட்டத்தில் இருந்து வருகின் றது.

அண்மைய தரவுகளின்படி 19.5 மில்லியனாக உள்ள இலங்கையின் தற்போதைய சனத்தொகை, 2025ஆம்

திரநிலையில் வைத்திருப்பதற்கு 15 வயதிற்குக் குறைவானவர்களின் எதிர்காலத் தீர்மானமே நேரடியாகத் தாக்கம் செலுத்துகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

(உ-18)



நேற்று முனதினம் காலியில் நடைபெற்ற கிரிக்கெற் போட்டியில் இங் கிலாந்தின கிரஹாம்தோர்ப் கொடுத்து கச்சை இலங்கையின் ஜயசூரிய நழுவ விட்டதைப் பார்கிறார் கீப்பர் சங்கரா.

# பாகிஸ்தான்அணி நியூசிலாந்தைவென்றது

பாகிஸ்தானுக்கு கிரிக்கெற் சுற் றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூ சிலாநது கிரிக்கெற் அணிக்கும. பாகிஸ்தான் கிரிக்கெற் அணிக்கு மிடையில் நடைபெற்ற மூன்றாவது சர்வதேச ஒருநாள் போட்டியிலும் பாகிஸ்தான் அணி வெற்றிபெற்றுள் ளது.

பாகிஸ்தானின் பைசாலபாத் நக ரில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நியூசிலாந்து அணியை 51 ஓட்டங் களால் வெற்றி கொண்டதன் மூலம் 5ஒருநாள் சர்வதேசப் போட்டிகள் கொண்ட தொடரை 3:0என்ற கணக் கில் பாகிஸ்தான் அணி வெற்றி கொண்டுள்ளது.

இநதப்போட்டியில் நாணயச் சுழற் சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணியானது முதலில் துடுப்பெடுத் தாடி நிர்ணயிக்கப்பட்ட 50ஓவர் முடி வில் 7 விக்கெற்றுக்களை இழந்து 314 ஓட்டங்களைப் பெற்றுக் கொண் டது.இதில் பாகிஸ்தான் அணி சார் பில் துடுப்பெடுத்தாடிய இனரான்வ் பர்ஹாட் 91ஓட்டங்களையும் யூசுப் ஜெஹாணா 64 ஓட்டங்களையும் யசீர்ஹமீட் 63 ஓட்டங்களையும், அப் துல்ரஸாக் 34 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக் கொடுத் திருந்தனர். நியூசிலாந்து அணி சார்பில் பந்து வீசிய மெத்தியூ வேக கர் 49 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 4 விக்கெற்றுக்களை தமது அணிக்கா கக் கைப்பற்றியிருந்தார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணியினால் 50ஓவர் முடிவில் 7விக்கெற்றுக்களை இழந்து 263 ஓட்டங்களையே பெறமுடிந்தது. நியூசிலாந்து அணிசார்பில் துடுப் பெடுத்தாடிய எச்.மார்சல் ஆட்டமிழக் காமல் 101ஓட்டங்களையும் ஹரிஸ் 46 ஓட்டங்களையும், கிம்கிளேயா 32 ஓட்டங்களையும் தமது அணிக்காகப் பெற்றுக்கொடுத்தனர்.

பாகிஸ்தான் அணிசார்பில் பந்து வீசிய முகமெட் ஸாமி 22 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெற்றுக் களை கைப்பற்றியிருந்தார். மேலும் இத் தொடரில் மிகுதி இரண்டு ஒரு நாள் சர்வதேச போட்டிகள் இடம் பெறவுள்ளன.

(உ-68)

# இலங்கையின் வெற்றிக்கு வழிவகுத்த நஷார் முகமட்

லாவோஸ் கால்பந்தாட்ட அணிக்கு எதிராக கடந்த புதனன்று மாலை கொழும்பு சுகததாஸ விளையாட்டரங கில நடைபெற்ற 2006ஆம் ஆண டுக்கான உலகக் கிண்ண காலபந் தாட்டப் போட்டிகளுக்கான இறுதிச் சுற்று ஆசிய வலய முன்னோடிச் சுற்றின் தகுதிகாண் போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றுள்ளது. இப் போட்டியில் லாவோஸ அணியை 3:0 என்ற கோல்க கணக்கில் தோற கடித்ததன் மூலம் இலங்கையணி அடுத்த சுற்றிற்குத் தகுதி பெற்றுள் ளது.

இப்போட்டியின் 37வது நிமிடத் தில் இலங்கை அணிசார்பாக முத லாவது கோலை ஈ.பி.பிரசன்ன போட் டார். இடைவேளை நேரத்தின் போது 1:0 என்ற கோல் கணக்கில் இலங்கை அணிமுன்னிலை வகித்தது.

இடைவேளையின் பின்னர் இலங்கை அணிசார்பாக சுகந் ஜெயசூரிய இரண் டாவது கோலைப போட்டார். எவ் வாறாயினும் இந்தப் போட்டியில் இலங்கை அணி மேலும் 3கோல் களைப் போடும் சந்தர்ப்பங்களைத் தவறவிட்டிருந் தமை இங்கு குறிப் பிடத்தக்கது.

போட்டி முடிவடைய ஒருநிமிடம் மாத்திரமே இருக்கையில் இலங்கை அணிசார்பில் மூன்றாவது கோலை நஷார் முகமட் போட்டதன் மூலம் இலங்கையணியின் சிறப்பான வெற் றிக்கு வழிவகுத்தார். சர்வதேச கால் பந்தாட்டப் போட்டியொன்றில் இவர் பெற்ற முதலாவது கோல் இது வாகும்.

கடந்த வாரம் லாவோஸில் நடை பெற்ற இச்சுற்றுப்போட்டியில் லாவோ ஸிற்கு எதிரான போட்டி ஒன்று கோல கள் அற்ற சமநிலையில் நிறை வடைந் திருந்தமை தெரிந்ததே.

இலங்கையில் நடைபெறும் இந் தப் போட்டியில் வெற்றி பெற்றால் மாத்திரமே அடுத்த சுற்றிற்கு இலங்கை அணி தகுதி பெறுநிலை இருந்தது. இந்த வெற்றி மூலம் இலங்கை கால்பந் தாட்ட ரசிகர்களின் ஆவலுக்கு இலங கைகால்பந்தாட்ட அணி நம்பிக்கை யூட்டியிருப்பதாக கால்பந்தாட்ட அவ தானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக தொடர் தோல் விகளைச் சந்தித்துவந்த இலங்கை கர்ல்பந்தாட்ட அணி இப்போட்டியில் இருந்து புத்துயிர் பெறவேண்டும் என இலங்கை கால்பந்தாட்ட ரசிகர்கள் விரும்புகின்றனர்.

(உ-68)

## விளையாட்டுச் செய்திகள்



அவுஸ்திரேலியாவின் மேத்யூ ஹேடன் (வலது) விக்கெற்றை வீழ்த்திய மகிழ்ச்சியில் இந்திய வீரர் ஜாகீர் கான்

## இன்று ஒரு தகவல்

# அது மட்டும் போதுமா?

''எனக்கு இது மட்டும்தான் சார் தெரியும்! இதைத்தவிர வேறு எதுவும் தெரியாது!'' அப்படிஎன்று சொல்லிக்கொண்டே காலம் தள்ளுபவர்கள் நிறையப்பேர்! அவர்கள் எல்லாம் கஷ்டப்பட வேண்டியிருக்கும்.

ஒருவர் தன்னுடைய தொழிலில் மிகுந்த கெட்டிக்காரராக இருக்கலாம். அதற்காக எப்போதும் அதே ஞாபகத்திலே இருந்துவிட்டு உலகியல் அறிவு இல்லாமலே இருந்து விடக்கூடாது. அது ஆபத்து!

இதற்காக நமது தாத்தா, பாட்டியெல்லாம் ஒரு கதை சொல்லுவார்களே... கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

ஒருசமயம் நான்குபேர் சேர்ந்து வெளியூருக்குப் பிரயாணம் சென்றார்களாம். அந்த நான்குபேர் எப்படிப்பட்டவர்கள் தெரியுமா?

ஒருவர் வேதாந்தி... இன்னொருவர் சங்கீத வித்துவான் ...மூன்றாவது ஆள் வைத்தியர்... நாலாவது ஆள் ஜோசியர். இவர்கள் நான்குபேரும் நண்பர்கள். அதனால சேர்ந்து போனார்கள்.

வழியில் ஒரு ஊரிலே தங்கினார்கள்! இருண்டுபோய் விட்டது! அதனாலே இன்றைக்கு இரவு இங்கேயே தங்கியிருந்துவிட்டு நாளைக்குப் போகலாம் எனத் தீர்மானம் எடுத்தார்கள்! சாப்பாட்டுக்கு என்ன செய்வது? அங்கேயே கடைத் தெருவுக்குப் போய் சாமான்கள் எல்லாம் வாங்கிவந்து சமைத்து சாப்பிடலாம் என முடிவு எடுத்தார்கள். நான்கு பேர் இருப்பதனால் ஆளுக்கு ஒரு காரியமாய் செய்யலாம் என வேலையை பிரித்துக்கொண்டனர்.

வைத்தியர் காய்கறி வாங்கப் போனார். வேதாந்தி எண்ணெய் வாங்கப் போனார். ஜோசியர் பலசரக்கு வாங்கப்போனார். சங்கீத வித்துவானுக்கு சமைக்கிற வேலை!

எல்லாம் சரி... ஆனால் நடந்தது என்ன தெரியுமா? கடைத்தெருவுக்கு காய்கறி வாங்கப்போன வைத்தியர் அங்கே போய் சந்தையில் ஒவ்வொரு காய்கறிகளாய் எடுத்துப் பார்த்தார்.

இது பித்தம் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது! இது வாய்வு உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது! என்று ஒவ்வொன்றாய தள்ளினார். கடைசியில் ஒன்றுமே சரியில்லை! வெறும கையோடு திரும்பிவந்தார்.

எண்ணெய் வாங்கப்போன வேதாந்தி... ஒரு தொன்னையில் எண்ணெய் வாங்கினார். பேசாமலே அதை எடுத்துக் கொண்டுவரவேண்டியதுதானே! முடியவில்லை... அவர் வேதாந்த மூளை சிந்திக்க ஆரம்பித்து விட்டது.

தொன்னைக்கு எண்ணெய் ஆதாரமா? அல்லது எண்ணெய்க்கு தொன்னை ஆதாரமா? என்று ஆராய்ச்சியிலே இறங்கினார். என்ன ஆயிற்று தெரியுமா? வாங்கிய எண்ணெய் எல்லாவற்றையும் வழியிலே ஊற்றிவிட்டு வெறும் தொன்னையோடு வந்து சேர்ந்தார்.

பல சரக்கு வாங்கப் போன ஜோசியர் வழியிலே வந்தவர்களையெல்லாம் ஆங்காங்கே ஒரு மரத்தடியில் உட்கார வைத்து அவர்களுக்கெல்லாம் ஆரூடம் சொல்ல ஆரம்பித்துவிட்டார். அப்படி... ஒவ்வொருத்தராய் சொல்லி முடித்துவிட்டு கடைத்தெருவுக்குப் போய் சேர்ந்தார். இவர் அங்கே போய் சேருவதற்கு நீண்ட நேரம் ஆகிவிட்டது! கடையைப் பூட்டிவிட்டுப் போய்விட்டார்கள். என்ன செய்கிறது? இவரும் வெறும் கையோடு திரும்பி வந்து சேர்ந்தார். சரி இவர்கள் கதைதான் இப்படி ஆகிவிட்டது! அங்கே சமைக்கிறதுக்காக உட்கார்ந்திருந்தாரே சங்கீத வித்துவான், அவர் கதை என்ன ஆகிவிட்டது தெரியுமா?

அங்கே அவர் அடுப்பை பற்றவைத்து... உலையைக் கொதிக்க வைத்தார்... அதாவது ஒரு பானையிலே தண்ணீரை ஊற்றி அடுப்பில் வைத்தார். அது கொதிக்க ஆரம்பித்துவிட்டது. தண்ணீர் கொதிக்கின்ற சத்தம் இருக்கிறதே... அது இவருக்கு தாளம் போடுவது மாதிரி இருந்தது... ஒரே குஷி... பாட ஆரம்பித்து விட்டார். பாடிக்கொண்டே உற்சாகமாக கையிலே இருந்த கரண்டியாலே அந்தப் பானையிலே தட்டினார். அவ்வளவுதான் பானை ''பட்''டென்று உடைந்து போய்விட்டது. தலையிலே கையைவைத்துக்கொண்டு உட்கார்ந்து விட்டார்!

எந்தத் தொழில் தெரிந்தாலும் சரி... அதை புத்திசாலித்தனமாக பயன்படுத்தத் தெரியாதது ஆபத்துத்தான்! அதற்காகத்தான் இந்தக் கதை.

ஒருபஸ் சாரதி...! நல்ல கெட்டிக்காரர்...! பஸ்ஸை நல்ல திறமையாக, ஆபத்து இல்லாமலே ஓட்டினதற்காக பரிசுகள் எல்லாம் வாங்கியவர்.

அவரை ஒரு படகு ஓட்டுவதற்காக அழைந்துக்கொண்டு போயிருக்கிறார்கள்! மோட்டார் படகு! அதையும் நல்ல திறமையாகத்தான் ஓட்டிக்கொண்டு போயிருக்கிறார்! நடுக்கடலிலே போனதும் படகு நின்று போய்விட்டது! மோட்டாரிலே ஏதோ கோளாறு!

''என்ன செய்யலாம்?'' என்று அந்த சாரதியை கேட்டிருக்கிறார்கள்... படகிலே இருந்தவர்கள் எல்லாரும்!

'' கவலைப்படாதீர்கள்... ஒன்றும் பிரச்சினை இல்லை! எல்லாரும் கொஞ்சம் கீழே இறங்கித் தள்ளுங்கள் மோட்டார் இயங்கிவிடும்'' அப்படியென்றாராம் அந்த ஆள்!

**தென்கச்சி கோ. சுவாமிநாதன்**

# ஜனாதிபதி அமைச்சுக்களை பறித்தமை குறித்து விரிவான அறிக்கை வெளியிடுவார்

## இந்துஸ்தான் பத்திரிகை தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, கடந்த மாதம் 4ஆம் திகதி பாதுகாப்பு, உள்துறை, தொடர்பாடல் ஆகிய மூன்று முக்கிய அமைச்சுக்களையும் பொறுப்பேற்றதற்கான காரணங்களை விளக்கி விரைவில் விரிவான அறிக்கையொன்றை வெளியிடவுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இது பற்றி இந்துஸ்தான் பத்திரிகை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

ஜனாதிபதிக்கும் - பிரதமரிற்கும் இடையில் தற்போது நடைபெற்று வரும் இணக்கப்பாடு தொடர்பான பேச்சுவார்த்தைகள் முறிவடையும் சாத்தியம் தோன்றியுள்ள நிலையில், 2002 ஆம் ஆண்டு முற்பகுதியில் அத்துருகிரியாவில் உள்ள இராணுவ மறைவிடத்தின் மீது நடத்தப்பட்ட கண்டனத்திற்குரிய சோதனை தொடர்பான உத்தியோகபூர்வ அறிக்கையை ஜனாதிபதி வெளியிடவுள்ளார். இந்த அறிக்கையானது ஜனாதிபதி மூன்று முக்கிய அமைச்சுக்களான பாதுகாப்பு, உள்துறை, தொடர்பாடல் ஆகியவற்றை கடந்த மாதம் பொறுப்பேற்றுள்ளமையை நியாயப்படுத்தும் வகையிலேயே அமைந்திருந்ததாக சுட்டிக்காட்டி அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேலும் 2002 ஆம்ஆண்டு முற்பகுதியில் அத்துருகிரியாவில் உள்ள இராணுவத்தின் ஊடுருவிப் பாய்ந்து தாக்குதல் நடத்தும் பிரிவின் மறை விடம் சிரேஷ்ட பொலிஸார் சிலரால் சோதனைக்குள்ளானது.

இது தற்போது பதவி நீக்கப்பட்டுள்ள உட்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கவின் பூரண அனுமதியுடனேயே நடந்திருக்கின்றது.

எனவே, ஜோன் அமரதுங்கவின் அனுமதியுடன் நடந்தப்பட்ட இச்செயலால் அதாவது எதிரிகளின் பிரதேசததிற்குள் எவ்வாறு ஊடுருவித் தாக்குதல் நடத்துவது என்பது குறித்து பயிற்சி அளிக்கும் இப்பிரிவை பொலிஸார் சோதனையிட்டது அதன் இரகசியத்தன்மையை பெரிதும் பாதித்துள்ளது.

அத்துடன் அவர்களின் ஆற்றலையும் குறைத்து மதிப்பிடும் செயலாக இவை இருக்கின்றது. அது மட்டுமன்றி, இந்நடவடிக்கை சம்பந்தப்பட்ட பிரிவின் அதிகாரிகளின் உயிரிற்குப் பெரும் அச்சுறுத்தலாகவும் அமைந்துள்ளது என ஜனாதிபதி ஏற்கனவே உள்துறை அமைச்சருக்கு சுட்டிக்காட்டி கடிதம் எழுதியிருந்தார்.

ஆனால் அப்போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீது பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் சுமத்தி சில ராலி பிரசாரங்கள் மேற்கொள்ளப்பட்டன.

இதனால், மேலும் சீற்றம் அடைந்த ஜனாதிபதி இது குறித்து உடன் விசாரணைகளை நடத்த வேண்டும் என உள்துறை அமைச்சரை கோரியிருந்தார்.

உளதுறை அமைச்சர் இது குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அத்துடன், இராணுவத்திற்கு தகவல்களை வழங்கி வந்த தமிழ் மக்கள் பலர் விடுதலைப்புலிகளால் கொலைசெய்யப்பட்டனர். இச்சம்பவம் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் புலிகள் ஊடுருவி நடத்திய தாக்குதல் சம்பவம் ஆகும் இது குறித்தும் உளதுறை அமைச்சர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இவை பற்றி பல முறை ஜனாதிபதி உள்துறை அமைச்சருக்கு சுட்டிக் காட்டி கடிதம் எழுதியிருக்கிறார்.

எனவேதான் ஜனாதிபதி தான் 3 முக்கிய அமைச்சுக்களைப் பொறுப்பேற்றுள்ளதனை நியாயப்படுத்தி அறிக்கையொன்றை வெளியிடுவதற்கு மீண்டும் தயாராகி வருவதாக அந்தப் பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

## இராசி பலன்

**06. 12. 2003**
**(கார்த்திகை20, சனி)**
**திரயோதசி மு.இ.10-08 வரை**
**பரணி மு.இ.11.23 வரை**
**இராகுகாலம் 9.17 - 10.47**
**சுபநேரம் 3.17-4.47**
**சித்தாமிர்தம்**
**சனிப்பிரதோச விரதம்**

**மேடம்**
விருந்துபசாரம், சிந்தனைஆற்றல், காரிய அனுகூலம்.

**இடபம்**
சோம்பல் நிலை, காரியதாமதம், தனவிரயம், பிரயாணம்.

**மிதுனம்**
சயனசுகம், குடும்ப மகிழ்ச்சி, நணபர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும்.

**கடகம்**
நன்கொடை, தேக ஆரோக்கியம், எடுத்தகாரியம் கைகூடும், மேன்மை

**சிங்கம்**
உத்தியோக பங்கம் , தேசாந்திர வாசம், எதிர்பாராதசெலவு, பொருள்விரயம்.

**கன்னி**
முழங்கால்வலி, பொருள் விரயம், கலகம், காரிய தாமதம்.

**துலாம்**
கீர்த்தி, மனோதைரியம், சத்துரு ஜெயம், காரியசித்தி.

**விருச்சிகம்**
மனமகிழ்ச்சி, தடைப்பட்டகாரியம் கைகூடும். தனவரவு, உடல்நலம்.

**தனுசு**
அஜீரணரோகம், பணத்தட்டுப்பாடு, மனக்கவலை, முயற்சி தாமதம்.

**மகரம்**
தனநாசம், காரியதாமதம், மனச்சோர்வு, தொழில் கஷ்டம்.

**கும்பம்**
நற்கீர்த்தி, மனோதைரியம், எடுத்த கருமங்கள் கைகூடும், தனவரவு.

**மீனம்**
அதிகசெலவு, போசனசுகக்குறைவு, மனோசங்கடம், கௌரவக் குறைவு.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# சங்கானை ஆயுர்வேத ஆஸ்பத்திரிப் பணிகள் ஸ்தம்பிதம்

(தொல்புரம்)

வலிமேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சங்கானை ஆயுர்வேத வைத்தியசாலை கடந்த ஒருவருட காலமாக மூடப்பட்டிருப்பதால், அப்பகுதி மககள் மிகுந்த சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

மேற்படி பிரதேச சபையின் சுழிபுரம், வட்டுக்கோட்டை, அராலி உப பிரதேச சபைகளின் கீழ் உள்ள ஆயுர்வேத வைத்தியசாலைகள் ஒழுங்காக இயங்கி வருகின்ற நிலையில், சங்கானை ஆயுர்வேத வைத்திய சாலையை இயக்குவதில் சம்பந்தப்பட்டவர்கள் தொடர்ந்தும் அசமந்தப் போக்கைக் காட்டி வருவதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (உ-70)

## ஜெயவர்த்தனபுர பல்கலைச் சம்பவம்

# ஜனாதிபதி நியமித்த குழு அறிக்கை சமர்ப்பிப்பு

(கொழும்பு)

ஸ்ரீஜெவர்த்தனபுர பல்கலைக் கழகம் மூடப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழு மேற்படி பல்கலைக்கழக துணை வேந்தர் டி.எஸ்.எப்பி. [illegible]வத்தை மீதான குற்றச்சாட்டுக்களை ஆராய்ந்து அதன் அறிக்கையை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளது.

துணைவேந்தர் பல்கலைக்கழகம் தொடர்பான விடயங்களில் பீடாதிபதிகளுடன் கலந்துரையாடுவதில்லை எனவும், அவரது நலிவான நடவடிக்கைகளும் தற்போதைய நெருக்கடிகளுக்கு காரணமாக உள்ளது எனவும் 38 பக்கங்களைக் கொண்ட அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், மாணவர்களின் பிரச்சினைகளை கவனிப்பதற்காக உதவித் துணைவேந்தரை நியமிப்பது, பாதுகாப்பு விடயங்களை சீர்செய்வது, மாணவர் மன்றங்களுக்கான தேர்தல் நடைமுறைகளை மாற்றுவது, பகிடிவதையை தடுப்பதற்காக கடுமையான சட்டதிட்டங்களை அமுல்படுத்துவது போன்ற விடயங்கள் பற்றி ஆலோசனையும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (தி-60)

# தொழில் முயற்சியாளர்க்கு வட்டியில்லாக் கடன்

(தும்பளை)

சமுர்த்தி அதிகாரசபையினால் பருத்தித்துறை பிரதேச செயலகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்தி மேற்படி பிரதேசத்திற்குட்பட்ட தொழில் முயற்சியாளர்களுக்கு வட்டியில்லா கடனுதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதன் பிரகாரம், மேற்படி பிரதேசத்தில் உள்ள வீட்டுடன் சேர்ந்த 10 விற்பனை நிலையங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்கப்படவுள்ளது. இக் கடனுதவியில், 2 ஆயிரம் ரூபா உடன் செலுத்த வேண்டும். அத்துடன் மிகுதி 8 ஆயிரம் ரூபா வட்டியில்லாக் கடனாக தவணை அடிப்படையில் மீளச் செலுத தப்பட வேண்டும்.

மேலும், நடமாடும் வண்டில் விற்பனையாளருக்கு தலா 25 ஆயிரம் ரூபா பெறுமதியான நிலையான சொத்துக்களும் வழங்கப்படவுள்ளன. (உ-24)

## கவிஞர்கள் தினம்

(கொழும்பு)

இலங்கையில் முதல் முறையாக கலைஞர்கள் தினம் கொண்டாடப்படவுள்ளது

பண்டைய பாரம்பரியங்களை பாதுகாத்தல், முன்னாள்கலைஞர்களின் திறமைகளை கௌரவித்து தற்போதைய சந்ததியினருக்கு உணர்த்துதல் என்பன இத் தினம் கொண்டாடப்படுவதன் முக்கிய நோக்கங்களாகும்.

முன்னாள் பிரதமர் அமரர் றணசிங்க பிறேமதாச 1995 ஆம் ஆண்டு டிசம்பர் 5ஆம் திகதி ரவர் கோள் மன்றத்தை ஆரம்பித்தார்.

இதனை நினைவு கூரும் முகமாக நேற்றைய தினம் கலைஞர்கள் தினமாக பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. (உ-60)

நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த
தன்மையான் ஆளப்படும் - குறள்

# வலம்புரி

## தட்டிக்கழிக்கும் சந்திப்புக்கள்

ஐக்கிய தேசிய முன்னணி அரசின் கீழ் இருந்த மூன்று முக்கிய அமைச்சுக்களை ஜனாதிபதி பொறுப்பேற்றதன் விளைவாகச் தேக்கமடைந்துள்ள சமாதான முயற்சிகள் மீண்டும் தொடருமா என்ற சந்தேகம் இப்போது மக்கள் மத்தியில் வலுப்பெற்றுள்ளது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியும், அதிகாரமற்ற பாராளுமன்ற அரசும், குழம்பிபோயுள்ள நிலைமை சமாதானத்திற்கே ஆப்பு வைப்பதாக அமைந்து விட்டது.

தேசிய நல்லிணக்க அரசொன்றை அமைத்து அதன் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்பது ஜனாதிபதியின் நிலைப்பாடு, ஆனால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலத்தைக் கொண்ட நாம், எதற்காக தேசிய அரசை அமைக்க வேண்டும் என்பது பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவின் முடிபு. இந்த இரண்டு முரண்பட்ட முடிபுகள் சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டுள்ளது.

ஜனாதிபதியும், பிரதமரும் அடிக்கடி சந்தித்துப் பேசுகின்ற போதிலும் ஒவ்வொரு சந்திப்புக்களின் பின்னரும், முடிபுகள் எதுவும் எட்டப்படவில்லை என்பதே இருதரப்பு அறிவிப்பாக உள்ளது. வடக்குக் கிழக்கு இணைந்த மாகாண சபைக்கான இடைக்கால தீர்வுத் திட்டத்தை விடுதலைப் புலிகள் அரசிடம் கையளித்திருக்கும் வேளையில், ஜனாதிபதியும் பிரதமரும் தமக்கிடையேயான சந்திப்புக்களை நீடித்து வருவது அவ்வளவு நல்லதாகவில்லை.

அரசுத் தலைவர்கள் தமக்குள் உடன்பாடு காண்பதிலேயே இழுபறிப்படுவார்களாயின், விடுதலைப்புலிகள் சமாதானத்தின்பால் கொண்டுள்ள நம்பிக்கை வீணடிக்கப் படுவதுடன், அதன் விளைவு பாரதூரமானதாகவும் அமையும்.

கடந்த இருபது வருட காலமாக நாட்டில் நீடித்து வரும் யுத்தம் முடிபுக்கு கொண்டு வரப்பட வேண்டுமாயின் ஜனாதிபதியும், பிரதமரும் இணைந்து செயற்படுவது தவிர்க்க முடியாதென்பது யதார்த்தம். இதற்கமைவாகவே இலங்கை அரசியல் யாப்பும் அமைந்துள்ளது.

ஆனால், இரு தலைவர்களின் இணைவும் இனப்பிரச்சினைக்கு நியாயமான முறையில் தீர்வு காண்பதற்காக இருக்கவேண்டுமே தவிர, மீண்டும் இலங்கை பௌத்த தேசம், சிங்களவர்களே ஆளப் பிறந்தவர்கள் என்ற வரட்டுக்குணம் மேலெழாமல் இருப்பது அவசியமாகும்.

இனவாதக் கருத்துக்கள் தந்த பரிசு என்ன என்பதை அறிந்த பின்பும் அதற்கு நெய்யிட்டு மூளவைப்பது, இத் தேசத்திற்கு செய்யும் பெரும்பழியாகும்.

எனவே இரண்டு தலைவர்களும் அடிக்கடி சந்திப்பதை விடுத்து, இனப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்ற ஒரே குறிக்கோளுடன் செயற்பட வேண்டும், இல்லையேல் அழகிய இலங்கைத் தீவை இனவாதப்பேய் காவுகொள்வது உறுதியாகி விடும்.

# அழிவடையும் கற்பக தருவுக்கு புத்துயிர் ஊட்டும் பனையியல்

## திறனாய்வுக் களம்

பனை தமிழர்களின் தேசிய சொத்து. குறிப்பாக வடக்கு -கிழக்கில் வாழும் தமிழர்களின் அன்றாட வாழ்வின் அச்சாணியாகவும் அமைந்துள்ளது. பனையைப் பற்றிய பல்வேறு வகையான




நூல்கள் எழுதப்பட்டுள்ளன. எனினும் பனை பற்றிய முழுமையான தகவல்களை உள்ளடக்கி மேலும் பல ஆய்வுகளையும் முன்னெடுத்து ''பனையியல்'' என்னும் நூலை முன்னாள் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் முருகேசு - பாக்கியநாதன் எழுதியுள்ளார்.

பனை பற்றிய பூர்வீகத் தகவல்களுடன் ஆரம்பித்து கலாசாரம், மகத்துவம், பரம்பல்கள் பற்றி விரிவாக எழுதியுள்ளார். நமது ஈழ நாட்டுடன் நின்றுவிடாது, அயல்நாடான இந்தியாவிலும் இதர உலக நாடுகளிலும் பனை பற்றிய விபரங்களை அடுக்கடுக்காய் எழுதியுள்ளமை தொடக்கத்திற்கே மணிமுடியாய் அமைந்துள்ளது.

பனையில் அமைந்துள்ள ஒவ்வொரு பகுதியும் மனிதனுக்கு பிரயோசனமானவையாகும். இதனால்தான் ''கற்பகம்'' என்ற பெயரை அது தாங்கிக் கொணடிருக்கிறது.

| நூல்:-பனையியல் |
|---|
| ஆசிரியர்:-முருகேசு பாக்கியநாதன் |
| விலை:- 200 ரூபா |

கற்பக தருவின் ஒவ்வொரு அங்கங்களையும் பிரித்து அவற்றின் பயன்பாடுகள் பற்றி மிக விரிவாகத்தந்துதவியுள்ளார். அத்துடன் நமது பாரம்பரிய உற்பத்திகளையும், நவீன உற்பத்திகளையும், அவை சார்ந்த ஆய்வுகளையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பனைகள் அழிக்கப்படுவதால் ஏற்பட்டுவரும் தீமைகளையும் அவற்றைப் பற்றிய பாதுகாப்பின் முக்கியத்துவத்தையும் இந்நூலில் காண முடிகின்றது. அத்துடன் நின்று விடாது அரசாங்கம் பனைகளைப் பாதுகாப்பதற்கான சட்ட வரைபுகள் பற்றியும், ஆய்வுகள், புணர் நிர்மாணம் என்பனவும் சொல்லப்பட்டுள்ளது. திட்டமிட்ட பண்ணைகள் மூலம் பனை அபிவிருத்திச்சபை ஆற்றிவரும் முன்னெடுப்புக்களையும் இந்நூல் வரைந்துள்ளது.

பனையின் முழுமையான பயன்பாடுகள் மூலம் எல்லா வளங்களையுமேபெற்றுவிட முடியும் என் பதற்கு இந் நூல் சான்றாகும். கிட்டத்தட்ட 153 அதிகாரஙகளுக்குள் இயன்றளவு கருத்துக்களை தெளிவாக எழுதியுள்ளாார்.

பனம் பொருட்களின் விபரங்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் விஞ்ஞான ரீதியாகவும், தொழில்நுட்ப ஆய்வாகவும் சொல்லி நமது பாரம்பரிய செயல திட்டங்களையும் சேர்த்துக்காட்டுகின்றார். பனையுடன் தொடர்புடைய நிறுவன அமைபபுக்கள் பற்றிய முழுத் தகவல்களையும் சேகரித்து சொல்லப்படடுள்ளது. அதுவும் மாவட்ட ரீதியாக இயங்கும் நிறுவன அமைப்புகளை ஒருங்கமைத்து எழுதப்பட்டுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக பனை சார்ந்த ஆய்வுகளைப் பற்றி எழுதிய பல்வேறு நூல்களையும் மேற்கோளாகத் திரட்டி குறிப்பிடப்பட்டுள்ளது. இது பிற்கால ஆய்வாளர்களுக்கு பேருதவியாக அமையும் மரபு அது மாற்றம் செய்யப்பட்ட புதிய பனை இனங்களை அறிமுகம் செய்யவேண்டிய தேவைபற்றியும் எதிர்கால தொழில் வளர்ச்சிப் பயன்பாடு, தொழில் சார் சிரமங்களை பற்றியும் மிக ஆழமாக தெளிவாக்கப்பட்டுள்ளது. குறைந்த செலவில் மிகக்கூடிய பலன்களைப் பெற்றுக் கொளவதற்குரிய வழிவகைகளை ஆராய்ந்துள்ளார்.

பனையின் உப உணவுகள் பட்டியல்களும் அவற்றின் செயன்முறை பற்றியும் ஒரு அதிகாரம் எழுதப்பட்டுள்ளது.

வளர்ந்துவரும் விஞ்ஞான கலைச் சொற்களுக்கு ஏற்ற தமிழ் கலைச் சொற்கள். பற்றிய பட்டியல்காணப் படுகின்றன. இந்நூலை மேலும் விரிவாக்கம் செய்துகொண்டே போனால் பல புதிய தகவல்களை சேகரிக்க முடியும். மொத்தத்தில் பனை ஆய்வாளர்களுக்கு இது ஒருதிறவு கோல்.

யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சு.மோகதாஸ் அவர்களின் அணிந்துரையும், யாழ். பல்கலைககழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் நூலாசிரியர் பற்றி சொல்லும் தகவல் உரையும் இந் நூலில் இரு புறங்களையும் மேலும் அலங்கரிக்கின்றன. மொத்தத்தில் தமிழர்களின் ஒவ்வொரு வீடுகளிலும் இருக்கவேண்டிய புத்தகம்.□

சி.புவநேசமூர்த்தி
சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர்
பனை அபிவிருத்திச்சபை

# மூன்று ஆண்டுகளுக்குள் கண்ணிகளை முற்றாக அகற்றும் செயல்திட்டம்

## கொழும்பில் நேற்று முன்தினம் அங்குரார்ப்பணம்

(கொழும்பு)

அடுத்துவரும் 3 ஆண்டுகளுக்குள் இலங்கையின் பல்வேறு பகுதிகளிலும் புதைக்கப்பட்டுள்ள நிலக் கண்ணிவெடிகளை முற்றாக ஒழிப்பதற்கான செயற்றிட்டம் ஒன்று நேற்றுமுன்திம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டப்பிரிவு, யுனிசெவ் நிறுவனம் என்பனவற்றின் நிதியுதவியுடன் இத் திட்டம் அமுல் செய்யப்படவுள்ளதாக பிரதமரின் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

இச் செயற்றிட்டம் ஆரம்ப வைபவத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய செயலாளர்,

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் 11 இலட்சம் மிதிவெடிகளும், கண்ணிவெடிகளும் புதைக்கப்பட்டுள்ளன. இவற்றில வெடித்த நிலையில் உள்ள ஒரு இலட்சத்து 50ஆயிரம் வெடிபொருள்களும் அடங்கும்.

இப் பகுதியில் புதைக்கப்பட்டுள்ள நிலைக்கண்ணிவெடிகளால் நாளாந்தம் 4 பேர் பலியாகின்றனர்.

போரில் ஈடுபடும் எந்தத் தரப்பினராக இருந்தாலும், எதிர்காலத்தில் இவ்வாறான நிலக்கண்ணி வெடிகளையும், மிதிவெடிகளையும் புதைகக்கூடாது எனக் கோரும் சர்வதேச பிரகடனங்களில் கைச்சாத்திடுவதற்கும், புதைக்கப்பட்டுள்ளவற்றை அகற்றுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அத்துடன் கண்ணிவெடிகளை அகற்றும் திட்டங்கள் தொடர்பாக மக்கள் மத்தியில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்த பல ஊடக நிகழ்ச்சிகளும் தயாரிக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி-61)

# தகவல் சுதந்திர சட்டமூலம் அமைச்சரவையில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

தகவல் சுதந்திர சட்டமூலம்கடந்த புதனன்று நீதியமைச்சர் லொக்கு பண்டாரவினால் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டது.

அத்துடன் இச் சட்டமூலம் அரசியல் யாப்பிறகு ஒவ்வாததாக இருக்கவில்லை என்றும் அரசியல் யாப்பின் 13 வது சீர்திருத்தத்தின்படி இதில் அடங்கியுள்ள விடயங்கள் தடை செயயப்பட்டதாகவோ அல்லது வரையறையுடையதாகவோ இருக்கவில்லை எனவும் சட்டமா அதிபர் தெரிவித்துள்ளதாகவும் அமைச்சர் அங்கு தெரிவித்தார்.

இதேவேளை, தன்னால் மக்கள் தொடர்பாடல் அமைச்சு பொறுப் பேறகப்பட்ட பின்னர் அவதானித்ததன்படி இந்த சட்டமூலததை முழுமையாக ஆராய இரண்டுவாரகால அவகாசம் வழங்குமாறு ஜனாதிபதி கேட்டுக் கொண்டதற்கு அமைச்சரவை சம்மதித்துள்ளது.

சட்டவரைபின் முக்கிய அம்சம் யாதெனில் இந்த அரசாங்கம ஆட்சி முறையில் வெளிப்படைத்தன்மையையும, பொறுப்புக்கூறும நிலையையும் பேணுவதென்பது அரசின் கொள்கையாக இருக்கும். இதில் அரச தகவல்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதாகும். (உ-6)

# சீமெந்துப் பைக்கற் விநியோகம்

(கொய்யாத்தோட்டம்)

புளியங்கூடல், சின்னமடு, வேலணை மேற்கு எட்டாம் வட்டாரம், வேலணை மேற்கு ஆறாம வட்டாரம ஆகிய கிராமங்களில் வசிக்கும் வறிய மக்களுககான மலசலகூடம், கிணறு, வீடு என்பனவற்றை அமைப்பதற்கு வேணடிய 2ஆயிரம் சீமெந்துப் பைக்கற்றுக்களை இந்து காலசார அமைச்சு அண்மையில் வழங்கியது. (உ-31)

# நிதி ஒதுக்கீடு

(ஊர்காவற்றுறை)

இலங்கை சமுர்த்தி அதிகாரசபையினால், ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் கைத்தொழில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்பொருட்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி நிதி கைத்தொழில் நடவடிக்கையில் ஈடுபடுபவர்களின் உபகரணக் கொள்வனவுக்காகப் பயன் படுத்தப்படவுள்ளது. (உ-75)

## தினசரி தியானம்

### செல்வமும் வறுமையும்

அறியாமையே வறுமைக்குக் காரணம். அழியாததும் குறையாததுமான செல்வம் ஆன்மீகமாகிய செல்வமே. எந்தக் கொள்ளைக் காரனும் இதைக் கொள்ளை அடிக்க முடியாது. கந்தையை உடுத்திக் கொண்டும் உண்ண எதுவும் இல்லாமலும் இருப்பவரிடமும் இச்செல்வம் இருக்கு மானால் ஏழுவுலகங்களிலும் அவரே மிகப்பெரிய செல்வந்தர் ஆவார். அவர் அரசருள் அரசராவார். மற்ற செல்வர்கள் அனைவரும் நிச்சயமாக ஏழகைளே. அவர்கள் ஜடப் பொருள்களுக்கு உரிமையானவர்கள் என்றாலும் ஏழைகளே. ஆகவே ஆன்மீகச் செல்வராகுங்கள்.

சுவாமி சிவானந்தர்

# இந்திய அதிகாரப் பகிர்வுபற்றி ஹக்கீம் குழுவினர் ஆராய்வு

(கொழும்பு)

இந்தியாவில் மத்திய அரசுக்கும் மாநில அரசுக்கும் இடையில் அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்து கொள்ளப்படடுள்ள முறைகள் பற்றி அமைச்சர் ரவூப்ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் குழுவினர் ஆராய்ந்துள்ளதாக துறைமுக அபிவிருத்தி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சர் ரவூப்ஹக்கீம் தலைமையிலான முஸ்லிம் காங்கிரஸ் குழுவினர் இந்திய அரசின் அழைப்பை ஏற்று அங்கு சென்றுள்ளனர்.

இவ் இந்திய விஜயம் குறித்து அமைச்சு வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

இந்தியாவில் இடத்துக்கு இடமும் இனங்களுக்கிடையிலும் உள்ள தேவைகள் குறித்து அதிகாரங்கள் மாறுபடும் பொழுது அரசியல் அமைப்பில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்காதவாறு அவை கையாளப்படும் முறைகள் குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இந்தியாவின் மேற்கு வங்காள மாநிலத்தில் வாழும் ''குர்க்கா'' என அழைக்கப்படும் சிறுபான்மை இனத்தவருக்கு எவ்வாறு அரசியல் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன என்பது குறித்து அம்மாநில அதிகாரிகளுடன் ஆராய்ந்ததாகவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடபட்டுள்ளது.

இதேவேளை, சமாதானப் பேச்சுக்களில் மூன்றாம் தரப்பாக முஸ்லிம்கள் கலந்துகொள்ளவேண்டும் என்று வலியுறுத்திவரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தமக்குத் தனி அதிகாரங்கள் வழங்கப்படவேணடும் என்றவகையில் அதிகாரப்பகிர்வு யோசனைகள் குறித்து ஆராய்ந்து வருவதும் தெரிந்ததே. (இ)

# இலங்கையை 5 அலகுகளாகப் பிரிப்பதே இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அமையும்

### பாராளுமன்றில் சிவாஜிலிங்கம் எம்.பி உரை

(கொழும்பு)

புலிகளின் தன்னாட்சி அதிகார சபைக் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவேண்டும் இல்லாவிடில் நாட்டை 5 நிர்வாக அலகுகளாகப் பிரிக்கவேண்டும் என்றும் தமிழ்க்கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் பாராளுமன்றத்தில் வலியுறுத்தினார்.

அவர் அங்கு பேசும் போது; புலிகளின் கோரிக்கைகளை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளாவிடிலோ அல்லது தமிழர்களுக்கு தனியான நிர்வாக அலகை வழங்க மறுத்தாலோ, நாட்டை 5 பிரிவுகளாக பிரித்து அவற்றிற்கு புறம்பான ஆட்சி செய்யும் அதிகாரங்களை வழங்குவதே ஒரே யொரு மாற்று வழியாக இருக்கும். இவ் அதிகாரங்கள் 3சமூகத்தவரினதும் உரிமைகளைப் பாதுகாப்பதாக இருக்கும். இத்தகையதொரு பிரிவில் ஒவ்வொரு சமூகத்தவர்களுக்கும் அதிகாரங்கள் புறம்பாக ஒப்படைக்கப்பட வேண்டும். அப்போதுதான் இத்தகைய அலகுகளிடையே எதுவித பிரச்சினைகளும் இருக்காது.

ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக் காலத்தில் இனப்பிரச்சினைக்கு சிறந்த தீர்வாக அரசியலமைப்பின் 13வது சீர்திருத்தத்தினூடாக மாகாண சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. ஆனால் அவை இன்று செயலிழந்து போயுள்ளன. புலிகளின் விருப்பதிற்கு மாறாக அரசாங்கத்தால் முன்வைக்கப்படும் எந்தத் தீர்வும் தோல்வியடையும். புலிகள் விரும்புவதை வழங்குவதே நிலையான சமாதானத்தினை ஏற்படுத்த சிறந்த வழியாக இருக்கும் என்றும் சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்தார். (த-6)

## தமிழ் விவரண திரைப்படம் காண்பிக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

நெல்லியடியில் கடந்த வருடம் டிசம்பர் 10 திகதி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட வன்முறையை எடுத்துக்காட்டும் வகையில் சலன சித்திரம் தயாரித்த தமிழ் விவரணத் திரைப்படம் எதிர்வரும் 10 திகதி நெல்லியடியிலுள்ள திரையரங்குகளில் இலவசமாக் காண்பிக்கப்படவுள்ளது. (ந-5)

## தென்னாபிரிக்க...

செய்த விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவை ஜோகான்னஸ் பேர்க் விமானத்தில் வைத்து, ஆபிரிக்க தேசிய காங்கிரசின் வெளிவிவகார அமைச்சைச் சேர்ந்த இமானுவேல் வரவேற்றார்.

இவர்கள் ஆபிரிக்க தேசிய காங்கிரசைச சேர்ந்த உதவிப் பிரதமரின் ஆலோசகரான இப்ராஹீமைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதோடு, நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து தென்னாபிரிக்க அனுபவங்கள் குறித்து ஆராய்ந்துள்ளனர்.

அத்துடன், தென்னாபிரிக்காவில் வாழும் தமிழ் பேசும் மக்களையும் நேற்றுச் சந்தித்து அம்மக்களின் வாழ்க்கை முறைகள் குறித்து அறிந்து கொண்ட இவர்கள், நேற்று கேபடவுனுக்கு விஜயம் செய்துள்ளனர். (இ)

## பயங்கரவாதம்...

மையத்தின் வழக்குரைஞரும் ஜியார்ஜியப்பல்கலைக் கழகத்தின் சட்ட விரிவுரையாளருமான டேவிட் கோல் தனது வாதத்தில் இதனைச் சுட்டிக்காட்டினார். இதேவேளை வழக்குரைஞர் டேவிட் கோல் விடுதலைப் புலிகளிற்கு மனிதாபிமான நடவடிக்கைகளுக்கு உதவிய அமைப்புக்கள் மற்றும் ஒரு மருத்துவர் போன்றவர்களுக்காக வாதிடுவதற்காகவே இவ்வழக்கில் தோற்றினார். இந்த வழக்கு குர்திஸ் விடுதலை அமைப்பான குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியின் மனதாபிமான நட்வடிக்கைகளுக்கு உதவுபவர்களாலும் சமகாலத்தில் மேற்கொள்ளப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

# மூதூரில் கைக்குண்டு வீச்சு புலிகள் முற்றாக மறுப்பு

(திருகோணமலை)

திருகோணமலை மூதூரில் இடம்பெற்ற கைக்குண்டுத் தாக்குதலுக்கும் தமக்கும் எதுவித தொடர்பும் இல்லையென தமிழீழ விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூதூர் பள்ளிவாசலுக்கு அண்மையில் நேற்று முன்தினம் இடம் பெற்ற கைக்குண்டுத் தாக்குதலில் முஸ்லிம் இளைஞர் ஒருவர் கொல்லப்பட்டு இருந்தார்.

இச்சம்பவத்திற்கு விடுதலைப் புலிகளே காரணமென குற்றம் சுமத்தபபட்டிருந்தும் இக்குற்றச்சாட்டை முற்றாக மறுத்துள்ள விடுதலைப் புலிகள் மேற்படி தாக்குதல் சம்பவம் இரண்டு முஸ்லிம் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறைத் தொடர்ந்து இடம்பெற்றுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ளனர். (த)

## ஜனாதிபதி...

தேசிய முன்னணி உறுதியாக இருக்கிறதென்று பிரதமர் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியுள்ளதாகவும் அதனை முடிவு செய்ய எதிர்வரும் 10ம் திகதி மீண்டும்ஒரு தடவை சந்திப்பு நடைபெற வேண்டும் என்று ஜனாதிபதி தெரிவித்ததாகவும் கூறினார். (ம)

## நல்லிணக்க...

ளைத் தீர்த்துக் கொள்வதற்குக் கீழ் மட்டத்தினாலான தீர்வு ஒன்றை அறிவிக்க வேண்டிவரும். இருந்தும் ஓர் உடன்பாடு இன்னமும் இரண்டு வார காலத்துக்குள் எட்டப்படலாம் என்றும் ஜனாதிபதி நம்பிக்கை வெளியிட்டார். (ம)

### "வாழ்க்கையில் ஆன்மீகத்தின் பங்களிப்பு"

### மாதாந்த முழுநிலா துறைசார் கருத்தரங்கு

| | |
|---|---|
| தொழில் துறை | : கணக்கியல் துறை |
| காலம் | : 08.12.2003 திங்கட்கிழமை மு.ப 9.30 மணி |
| இடம் | : நாவலர் கலாசார மண்டபம், நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். |
| தலைவர் | : பிரம்மக்குமார் இரங்கநாதன் இளைப்பாறிய கணக்காளர் (Accountant) |

**சிறப்பு சொற்பொழிவு வழங்குவோர்**

*திரு.என்.சச்சிதானந்தன்*
(உதவி முகாமையாளர், இலங்கை வங்கி)

*திருமதி ரிதிராணி யோகேந்திரராஜா*
சிரேஷ்ட விரிவுரையாளர், வணிகத்துறை
யாழ். பல்கலைக் கழகம், திருநெல்வேலி

*சைவப்பிதா பொன். சாம்பசிவம் ஐயா*
கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்,
அகில இலங்கை சைவக்கழக அமைப்பாளர்.

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

யாழ் பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தினர்

(சி-6968)


நத்தார், புதுவருட மலிவு விற்பனை
X'Mas & New Year Sale
வாடிக்கையாளர்களின் நன்மை கருதி மார்கழி 1ஆம் திகதியிலிருந்து மார்கழி 31ஆம் திகதி வரை சகல பொருட்களுக்கும் விசேட கழிவுடன் மலிவு விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்
லைடன் புடவை நிலையம்
410,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (பஸ்நிலையம் எதிர்)
சகல பொருட்களுக்கும் விசேட கழிவுண்டு
T.P:2222381 [C/6957]



MEDICAL CHECK UP
வைத்திய பரிசோதனை
நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்
- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY- ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள் சிறுநீர்ப் பரிசோதனை.
இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி
சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### வேலன் முருகன் (குமாரு)

**(ஓய்வு,தியர் யாழ்.மாநகர சபை)**

கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வேலன் முருகன் (குமாரு யாழ்.மா.ச. ஓய்வூதியர்/ பிரபல நாட்டுக் கூத்து நடிகர்) 05-12-2003 நேற்று காலமானார். அன்னார் காலஞ்சென்றவர்களான வேலன், செல்லி ஆகியோரின் அன்பு மகனும், அன்னத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான பத்தன், கதிரன், சிவகாமி ஆகியோரின் அன்புச் சகோதரனும், அருமைநாயகம்(யா.மா.ச.ஓய்வூதியர்), அருமைமலர் ஆகியோரின் பாசமிகு தந்தையும், வல்லிதுரைராஜா, காலஞ்சென்ற சிவஞானம் ஆகியோரின் மாமனாரும், குமாரகுரு (யா.மா.ச.நீர் வேலைப் பகுதி), குமாரதாசன் (யா.மா.ச.நீர் வேலைப் பகுதி), மதனகுமார் (சிவஞானம் ஆட்டோ), கோகிலவதி, றோசாமதி, சத்தியலெனின்(யா.போ.வை. சத்திரசிகிச்சைப் பிரிவு, வனஜாதொலைபேசி) அருணா, கோகுலலெனின்(லண்டன்), சூரியலெனின்(லண்டன்), சுகுணா(சுவிஸ்), காந்தலெனின்,மயூரலெனின், வனஜா(யாழ்.கோ.இ.மா.வி. மாணவி), பிரபாகரன்(சுவிஸ்), சத்தியகுமார்(யாழ்.பல்கலைக் கழகம்) பிரேமகுமாரி, ஆகியோரின் அன்புப் பேரனும்;

அபிஷேக், ஆகாஷ், பிரியங்கா, ராகுல், சாள்ஸ், சாரங்கா, வர்சிஹா ஆகியோரின் அன்புப் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக இன்று (06-12-2003) பகல் 12 மணிக்கு கொட்டைக்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
**அருமைநாயகம்** (மகன்)
**பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

ஆஸ்பத்திரி வீதி
கோண்டாவில் கிழக்கு

(8002)

# 9 ஆவது நினைவஞ்சலி

மலர்வு 27 - 11 - 1949



உதிர்வு 17 - 11 - 1994

## அமரர் சிவகுரு நவரத்தினம்

(உரிமையாளர், கனகா பத்திரிகை அகம், திருநெல்வேலி)

திதி : 06.12.2003

**நீங்கள் பிரிந்து ஒன்பது ஆண்டுகள் ஆனாலும் தங்கள் நினைவலைகள் எங்கள் நெஞ்சங்களை விட்டு நீங்காது**

உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

நிரந்தர முகவரி:
கனக இல்லம்,
கைதடி கிழக்கு,
கைதடி

தற்போதைய முகவரி:
இல: 37, பலாலி வீதி
திருநெல்வேலி

உங்கள் பிரிவால் துன்புறும்;
மனைவி, மக்கள்,
உற்றார், உறவினர்கள்

(சி-6969)


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.12.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.